Chapter 1

## கலியன் சோதனை

விருத்தம்

இருந்தனர் விஞ்சை பெற்று இருபுற முனிவர் சூழப்
பொருந்திடும் கமல மாது பூரண மதுவாய் நிற்கக்
கரிந்திடும் நீசப் பாவி கயிறுவாள் வெடிகள் சூலம்
புரிந்தவன் கோட்டி செய்து பிடிக்கவே வந்தா னங்கே

விருத்தம்

வருமுன்னே யருகில் நின்ற மக்களை வைந்த ராசர்
கருதின மாக நோக்கிக் கடக்கவே நில்லும் நீங்கள்
பொருதிட நீசன் வாறான் பொறுத்துநாம் வந்த போது
அருகிலே உங்கள் தம்மை அழைத்துநாம் கொள்வோ மென்றார்

## சுவாமி பொறுமை உரைத்தல்

நடை

முப்படியே யுள்ள முறைநூற் படியாலே
இப்போது நீசன் இங்கோடி வாறான்காண்
மெய்ப்பான மக்களெல்லாம் விலகிநின்று வந்திடுங்கோ
செய்கிறதைப் பார்த்துத் திரும்பியிங்கே வந்தவுடன்
கையருகி லுங்களையும் கட்டாய் வரவழைப்போம்
என்று மக்களுக்கு இயம்ப அவர்விலக
முன்றுசெய்யாப்பாவி முடுகுங்கௌடனுமே
கூட்டப் படையோடு கொக்கரித் தேதுடிப்பாய்ச்
சாட்டை வெறிபோலே சாடிவந் தான்கௌடன்
சூழப் படையைச் சூதான மாய்நிறுத்தி
வேழம் பலரேவி வெடியா யுதத்துடனே
வந்து வளைந்தான் வைகுண்டர் வாழ்பதியில்
சிந்துக் குயிரான ஸ்ரீபல்ப நாபருமே
கவிழ்ந்துபதி வாசலிலே கட்டிலின் மேலிருக்க
அவிழ்ந்த துணியோடே அவரிருக்கு முபாயமதை
அறியாமல் நீசன் அணிவகுத்துத் தன்படையைக்
குறியாய்ப் பிடிக்கக் கூட்ட மதில்நுழைந்து
சாணா ரினங்கள் சதாகோடி கண்டுளைந்து
வாணாள் வதைப்பானோ என்று மனதுளைந்து
குதிரை மேலேறிக் கொடுஞ்சாட்டை யால்வீசி
சதிரு சதிராய்ச் சாணாரைத் தானடித்து
அடிபட்ட போது அவர்கள்மிகக் கொக்கரித்து
முடிபடவே யிந்த முழுநீச வங்கிசத்தை
இப்போ தொருநொடியில் இவரையெல் லாமடித்து
மெய்ப்பாகக் கொன்று விடுமோ மெனச்சினத்தார்

ஆளுக் கொருவன் ஆவானோ நீசனெல்லாம்
தூளுபோ லாக்கவென்று துடியா யெழுந்திருந்தார்
சான்றோர் சினத்துத் தாறு மிகப்பாய்த்து
ஆன்றோரை நெஞ்சில்வைத்து ஆடை மிகஇறுக்கி
உடையிறுக்கிக் கட்டி உல்லாசத் தொங்கலிட்டுப்
படைத்திரளாய்ச் சான்றோர் பண்பா யொருமுகமாய்
எதிர்த்துநிற்கும் போது எம்பெருமாள் தானறிந்து
பொதுக்கென்ற கோபமதைப் புந்திதனி லடக்கிப்
பொறுத்து இருந்தவரே பெரியோரே யாகுமக்கா
அறுத்திட வென்றால் அபுருவமோ என்றனக்கு
வம்புசெய்வதைப் பார்த்து வதைக்கவந்தே னக்குலத்தை
அன்புக் குடிகொண்ட அதிகமக்கா நீங்களெல்லாம்
பொறுத்து இருங்கோ பூலோகம் ஆளவைப்பேன்
மறுத்துரை யாடாமல் மக்களென்ற சான்றோர்கள்
என்னசெய்வோ மென்று இவர்களையைத் தாங்கடித்து
பின்னே விலகிப் பெரியவனே யென்றுநின்றார்

விளக்கம்:

வைகுணடர் நாராயண மூர்த்தியிடம் விஞ்சை பெற்றுக்கொண்டு தான் தவம் இருந்த சாமிதோப்பு தலத்தில் வந்து . அப்போது கலிநீசனுடைய படைகள் அய்யாவை பிடிப்பதற்காக கொக்கரித்துக் கொண்டு வருகின்றது. அப்போது அய்யா அருகில் நின்ற மக்களை பார்த்து நீச பாவியானவன் கயிறு வாள், வெடிகள், சூலம் போன்றவற்றை கொண்டு கோட்டி செய்து இங்கு என்னைப் பிடிக்க வருகின்றான் ஆகவே நீங்கள் எல்லோரும் என் அருகில் இருந்து விலகி நில்லுங்கள். கலி நீசனுடைய வல்லமை என்ன என்பதையும் அவன் என்ன செய்கிறான் என்பதையும் பார்த்து அதன் பிற்பாடு நான் உங்களை என்னுடைய அருகில் அழைத்துக் கொள்வேன். அதுவரையிலும் சற்று விலகி நில்லுங்கள் என்று சொல்லி சான்றோர் மக்களை விலகி நிற்கும்படியாக செய்கின்றார்.

நீசன் கொடுமை

நீசன் மகிழ்ந்து எதிர்ப்பாரைக் காணோமென்று
பாசக் கயிறுகொண்டு பரமவை குண்டரையும்
கட்டி யிறுக்கிக் கைவெடியா லிடித்துக்
கெட்டி யிறுக்கிக் கீழேபோட் டுமிதித்துத்
தலைமுடியைத் தான்பிடித்து தாறுமா றாயிழுத்துக்
குலையக் குலைத்ததுபோல் குண்டரைத் தானலைத்துக்
குண்டியிலே குத்திக் குனியவிடு வானொருத்தன்
நொண்டியோ வென்று நெளியிலே குத்திடுவான்
வெடிப்புடங் கால்சுவாமி மேலெல்லாந் தானிடித்து
அடிப்புடங்கு கொண்டு அடித்தடித்துத் தானிழுப்பான்
சாணாருக் காகச் சமைந்தாயோ சுவாமியென்று
வாணாளை வைப்போமோ மண்டிப் பதனிக்காரா

பனையேறி சுபாவம் பட்டுதில்லை யென்றுசொல்லி
அனைவோரை யும்வருத்தி ஆபரணந் தேடவென்றோ
சமைத்தாய் நீசுவாமியென்று சாணாப் பனையேறி
உனைசாமி என்று உன் தேகத்தைப்பார்த்து
பனைச்சிரங் கின்னம் பற்றித் தெளியலையே
உனைச்சுவாமி யென்றால் ஒருவருக்கு மேராதே
ஆளான ஆளோநீ ஆளில் சிறந்தவனோ
தாழாய்க் கிடந்து சாமியென்று வந்தாய்நீ
நாரண சுவாமி நானென்ற தும்நீயோ
வாரணத்தின் காலில்கட்டி வாட்டுவோம் பாருஎன்பான்
உன்னோடு நின்றவர்கள் உன்னை யடிக்கையிலே
என்னோடு வந்து என்னவென்று கேட்கலையே
நீசுவா மியென்றால் நெகிழுவ ரோஇவர்கள்
பாசக் கயிறு பற்றுமோ வுன்கையிலே
வகைதேட வென்று மனுச்சுவாமி யென்றாயே
புகையோடு புகையாய்ப் போறாய்நீ வம்பாலே
நருளை வருத்திவிட்ட நல்லமந்தி ரத்தாலே
மருளச்செய் தெங்களையும் மண்ணில்விழ வைபார்ப்போம்
அல்லாம லுன்கைக் கட்டு மறுவதற்கு
வல்லாமை யுண்டானால் மந்திரத்தைப் பார்நீயும்
கூனைப் போலிருந்து குறுமுழி முழிப்பதென்ன
நானன்னா வென்று நகைப்பா ரொருகோடி
ஏசுவார் கோடி எறிவா ரொருகோடி
பேசுவார் கோடி பேயன்வெறும் பேயனெனச்
சொல்லி நகைப்பார் சுத்தமுள்ள நாரணரை
பல்லுயி ரும்படைத்த பரமன்வாய் பேசாமல்
கவிழ்ந்து கண்மூடிக் களிகூர்ந் தேமகிழ்ந்து
சவந்தரிய நாதன் தானே நடக்கலுற்றார்
வெடிகொண் டிடிப்பார் வெட்டவா ளோங்கிடுவார்
அடித்தடித்துத் தள்ளி அங்குமிங் குமிழுத்து
வேதனைகள் செய்வார் வேதநா ராயணரை
சாதனைக ளுள்ள சர்வபர நாரணரும்
எவ்வுகத் துக்கும் இப்பாடு என்பாடு
இவ்வுகத் துக்கும் இப்பாடு என்பாடு
அவ்வுகத்தி லுள்ள அநியாயப் பாவிகளை
இவ்வுகத்தைப் போலே எரியாமல் விடடேனோ
என்று மனதில் இதமாய் மிகவடக்கி
ஒன்று முரையாமல் ஊமைபோ லேநடந்தார்
நடக்கவே மாயன் நல்லன்பு சான்றோர்கள்
கடக்கவந்து நின்று கண்ணீர் மிகத்தூவி
ஏழைக்கா யிரங்கி எங்கள்குல மீதில்வந்தீர்
கோழைக் குலநீசன் கொண்டடிக்க வந்தானே
பாவிநீ சனாலே பட்ட துயரறிந்து

ஆவுமேய்த் தநாதன் ஆளவந்தார் நம்மையுமே
அய்யோஇனி நாமள் அலைந்துமிகப் போவோமென
மெய்யோடே குத்தி விழுந்தழுவார் சான்றோர்கள்
தாய்தகப்ப னில்லையென்று தானடித்த நீசனெல்லாம்
வாயயர்ந் திருந்தானே இவர்வந்த நாள்முதலாய்
இனியாரு நம்மை ஏற்றுக்கை தாறதுதான்
தனியானோம் நாமளினித் தலையெடுப்ப தெக்காலம்
என்று சான்றோர்கள் சொல்லி யழுதசத்தம்
கன்றுக் கிரங்கும் கண்ணர் மிகக்கேட்டு

அய்யா சான்றோர்க்கு அருளல்

மலையாதுங் கோநீங்கள் மாமுனிவன் புத்திரரே
அலையாதுங்கோ மக்காள் அய்யா திருவாணை
இப்பூமி தன்னில்வந்து இத்தனை நாள்வரைக்கும்
கைப்பொருளுக் கிச்சை கருத்தில் மிகநினைத்துக்
கைக்கூலி வேண்டிக் கருமஞ்செய்தே னானாக்கால்
இக்குவ லயத்தில் இனிவரேன் கண்டிருங்கோ
தன்மமது நிச்சத்துத் தாரணியில் வந்துண்டால்
நன்மைக் கடைப்பிடித்து நான்வருவேன் நானிலத்தில்
ஒன்றுக்கு மலைய வேண்டாங்கா ணுத்தமரே
என்றைக்கும் நானிருப்பேன் என்மக்கள் தங்களிடம்
ஆளுவே னோர்குடைக்குள் ஆனவை குண்டமனாய்
வாளுவோம் மக்கா வையகத்தை நாமாக

விருத்தம்

ஒன்றுக்கு மலைய வேண்டாம் உகபர நாத னாணை
என்றுக்கு மலையின் மீதில் ஏற்றின தீபம் போலே
கன்றுக்குப் பாலு போலும் கண்ணுக்குப் புருவம் போலும்
என்றுக்கு மக்கா வுங்கள் இடமிருந் தரசு ஆள்வேன்

விருத்தம்

முன்முறை விதியா லிந்த முழுநீசப் பாவி கையால்
என்விதிப் படவே வுண்டு இறப்பொன் றனக் கென்றதாலே
பின்விதி யெனக்கு நன்றாம் பெரும்புவி யாள்வோ மக்கா
உன்விதி நல்ல தாகும் ஒளிவறா வாழ்வீர் தாமே

விளக்கம்:

அப்போது சான்றோர் மக்கள் விலகி இருக்கின்ற அந்த வேளையிலே எந்த முன் அறிவிப்பும் இன்றி குறோணியின் கால் வழியாக உதித்த மூடக்கௌடன் படைகளை திரட்டிக்கொண்டு கொக்கரித்துக் கொண்டு சாட்டை வரி போலே சாடி வந்தான் வைகுண்டர் வாழுகின்ற வாழ்பதியில் வந்து வளைந்தான். இதை எம்பெருமான் அறிந்து கவிழ்ந்து கட்டிலின் மேலே இருக்க அவிழ்ந்த துணியோடு அவர் இருக்கும் உபாயமதை அறியாமல் வைகுண்டரை குறியாக பிடிக்க பக்தர்கள் கூட்டமதில் நுழைந்தனர்.

அய்யா வைகுண்டர் கவிழ்ந்த தலையோடு இருப்பதற்குரிய உபாயம் ஏன் என்றால் தான் ஏறெடுத்துப் பார்த்தால் கலி நீசர்களுக்கு அய்யாவின் அருள் பார்வை கிடைத்துவிடும். ஆகவே அவர்களுக்கு அந்த அருள் பார்வை கிடைக்காத வண்ணம் கவிழ்ந்து தலையோடு கட்டிலில் பூமி பார்த்த வண்ணம் இருந்தார். மேலும் அவிழ்ந்த துணியோடு என்று கூறப்பட்டிருப்பது எதற்காக என்றால் அய்யா தன்னிடம் இருக்கின்ற இறுக்கத்தை தளர்த்திவிட்டு அதாவது தான் தன்னுடைய இறுக்கத்தை பற்றி பிடிக்கின்ற போது கலிநீசர்களால் அய்யாவை நெருங்க முடியாது அவரைப் பற்றி பிடித்து இழுத்து செல்ல இயலாது. ஆகவே தன்னுடைய சக்தியை தளர்த்தி எம்பெருமான் இருக்கின்றார் என்பதை இங்கே சொல்லப்படுகின்றது. உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால் திருச்செந்தூரில் தேர்த்திருவிழாவின் போது தன்னுடைய சக்தியை அய்யா இறுக்க படுத்திய போது அந்த தேர் நகராமல் செய்ய முடிந்தது. அதுபோல தன்னுடைய சக்தியை இறுக்கப்படுத்தினால் கலிநீசர்களால் அய்யாவை நெருங்க இயலாது. தன்னுடைய சக்தியை தளர்த்திக் கொண்டு இருக்கின்றார் என்பதை சொல்வதற்காக ஆடை அவிழ்ந்த வண்ணம் என்பதை உதாரணமாக சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கலி நீசன் அய்யாவின் உபாயத்தை அறியாமல் அவரைப் பிடிப்பதற்காக குதிரை மேல் ஏறி கொடும் சாட்டையால் வீசி அடித்து வைகுண்டரை சூழ்ந்து இருந்த மக்களை எல்லாம் துரத்தி கொண்டு வைகுண்டரை நெருங்கினார். அப்போது சான்றோர் மக்கள் சினம் கொண்டு எழுந்து ஆளுக்கு ஒருவன் ஆவாரோ இந்த கலிநீச பாவிகள் என்று சொல்லி கலிநீசர்களுடைய படையை எதிர்ப்பதற்காக தயாரானார்கள்.

அப்போது வைகுண்டர் சான்றோர் மக்களை அழைத்து,

"**பொதுக்கென்றக் கோபமதை புத்திதனில் அடக்கி**
**பொறுத்து இருந்தவரே பெரியோரே ஆகுமக்கா**",

ஆகவே பொறுத்து இருங்கள் உங்களை நான் பூலோகம் வாழ வைப்பேன். கலியன் வம்பு செய்வதைப் பார்த்து வதைக்க வந்தேன் இந்த கலியுகத்தை. இந்த கலியன் என்ன என்ன வம்புகளை எல்லாம் செய்கின்றான் என்று அவன் செய்வதை எல்லாம் பார்த்து அவனாலே அவனுக்கு அழிவு ஏற்படும்படியாக செய்வேன். ஆகவே நீங்கள் பொறுத்து இருங்கோ என்று சான்றோர் மக்களைப் பார்த்து பொறுமை உரைத்தார்.

அந்த நேரத்தில் அய்யாவினுடய சொல்லுக்கு கட்டுப்பட்டு அவர்கள் வேறு எந்த செயலும் செய்ய முடியாமல் சான்றோர் மக்கள் எல்லாம் விலகி நின்றார்கள். அந்த தருணம் தன்னை எதிர்ப்பதற்கு யாரும் இல்லை என்று வைகுண்டரைப் பிடிப்பதற்காக முன்னேறி வந்தான்.

மக்கள் பொறுமையோடு விலகி நின்றதை பார்த்த நீசர்கள் மகிழ்ந்து பாச கயிறு கொண்டு பரம வைகுண்டரை கட்டியிறுக்கினர். கைவெடியால் இடித்தனர். தூக்கி கீழே போட்டு மிதித்தனார். தலைமுடியை பிடித்து தாறுமாறாக இழுத்தனர். குண்டியிலே குத்தி குனிய விட்டனர். வெடிப்பு டங்கால் சுவாமி என்று மேலெல்லாம் இடித்தனர். சாணருக்காக சுவாமி என்று வந்தாயோ உன்னுடைய வாணாளை நாளை வைப்போமா பார்! மண்டி பதனீர்காரா! பனையேறிப் பிழைக்க முடியவில்லை என்று அனைவரையும் வருத்தி ஆபரணம் தேட வேண்டும் சாமி என்று சமைந்தாயோ! சாணாப் பனையேறி! பனையினுடைய சிரங்கு கூட இன்னும் பற்றி தெளியவில்லையே! உன்னை சுவாமி என்றால் யாருக்கு ஏற்கும்? ஆளான ஆளோ! ஆளில் சிறந்தவனோ! தாழ கிடந்து சாமி என்று வந்தாயோ! நாராயண சுவாமி நீயா! உன்னை வாரணத்தின் மீது அதாவது யானையின் காலில் கட்டி வாட்டுகின்றேன் பார் என்றெல்லாம் வாயில் வந்தபடி வசை கூறி ஒரு சாதாரண மனிதனை அடித்தது போல அடித்து உதைத்தனர்.

( அய்யா வைகுண்டரை கலிமன்னனும் அவனது ஆட்களும் தாழ்ந்த குலம் என்றே நம்பினார். அவரவர்கள் நினைப்புக்கு தக்கவாறு அய்யா கட்சி அருளினார். பாவிகளின் முன்னால் பரம்பொருளே வந்தாலும் அவர்கள் திருந்துவதும் இல்லை தெய்வத்தை நம்புவதும் இல்லை. துரியோதனன் பாதாளம் வெட்டி தூது சென்ற கண்ணனை கொல்ல சதி செய்தபோது விஸ்வரூபம் எடுத்தார். சபையில் இருந்து அனைவரும் எழுந்து வந்து வணங்கினர். ஆனால் துரியோதனன் அவரை தெய்வம் என்று நம்பவில்லை. உன்னுடைய மாயாஜாலத்தை என்னிடம் காட்ட வேண்டும் என்று தான் கூறினார். இதுதான் அசுர புத்தி.)

உன்னை அடிக்கும்போது உன் அருகில் நின்றவர்கள் யாரும் எதிர்க்கவில்லையே நீ சுவாமி என்று என்றால் யாராவது நம்புவார்களா? உனக்காக யாராவது இரங்குவார்களா? புகையோடு புகையாய் போகப் போபோகிறாய். நருள்களை வருத்திவிட்ட நல்ல மந்திரத்தாலே இப்போது எங்களை மருளச் செய்து மண்ணில் விழவைப் பார்ப்போம் என்று ஏளனம் பேசினர். உன் கைகட்டை, உனக்கு வல்லமை உண்டானால் அவிழ்த்து விடு பார்ப்போம் என்று கைகொட்டி நகைத்தார்கள். இப்படி பலவாறு ஏசி பேசி பேன் பெரும் பேயன் என்றும் பைத்தியக்காரன் என்றும் நகைத்தனர். கல்லால் எறிந்தனர்.

ஈசர் கொடுத்த ஏதுவரம் ஆனாலும் வேசமற்ற வெல்ல மிகு பொருளாய் நிற்கும் எம்பெருமான் வாய் பேசாமல் கவிழ்ந்து கண்மூடி களிகூர்ந்து மகிழ்ந்து அவர்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் விட்டுக் கொடுத்தபடி சௌந்தர்ய நாதன் தாமே நடக்கலுற்றார். நடக்க நடக்க வெடிகொண்டு இடிப்பார்கள். வெட்டவாள் ஓங்குவார்கள். அடித்து அடித்து அங்கும் எங்கும் இழுத்து தள்ளுவார்கள். இப்படி பலவாறு வேதனைகள் செய்தனர். சாதனைகள் உள்ள சர்வ பரா நாராயணர் எவ்வுகத்திற்கும் இப்பாடு ஏற்பாடு. எந்த யுகத்திலும் அசுர சக்திகளை நான் அழிக்காமல் விட்டு வைத்ததில்லை. இவர்களையா விடப் போகின்றேன் என்று இதமாக மனதில் எண்ணி அடைக்கி ஒன்று உரையாடாமல் ஊமையைப் போல நடந்தார்.

நல்ல அன்பு உள்ளம் கொண்ட சான்றோர்கள் எல்லாம் இக்கொடுமையைப்பார்த்துக் கண்ணீர் வடித்தனர். கதறி கதறி அழுதனர். ஏழைகளுக்காக இரங்கி எங்களை பாதுகாப்பதற்காக எங்கள் குலத்திலே வந்தீர். கோழைக்குல நீசன் கொண்டடிக்க வந்தானே! பாவி நீசனாலே பட்ட துயர் அறிந்து ஆவு மேய்த்த நாதன் ஆள் வந்தார் நாள வந்தார் நம்மையுமே என்று எண்ணி ஏங்கி ஏங்கி அழுதனர்.

## வைகுண்டர் சான்றோர் மக்களை அமைதிப்படுத்துதல்

சான்றோர் மக்களுக்கு அய்யா ஆவமேத்த நாதனாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாகவே காட்சி அளித்தார். உயிர் உலக உயிர்கள் அனைத்தையும் காக்கும் பதியாகிய இறைவன் நம் மீது கருணை கொண்டு நம்மிடத்திலே வந்தார். இனி நாம் என்ன செய்வோம் என்று மெய்யோடு குத்தி மண்ணில் புரண்டு அழுதனர். தாய் தகப்பன் இல்லை என்று அடித்த இந்த நீசர்கள் எல்லாம் இவர் வந்த நாள் முதலாய் வாய் அயர்ந்து இருந்தானே! இனி யார் நமக்கு நல்ல துணை. மீண்டும் அனாதையாகி விட்டோமே! இனி தலையெடுப்பது எக்காலம் என்றுக் கதறி கதறி அழுதனர். சான்றோர்களின் இந்த அழுகுரலை கேட்டு இளம் கன்றுக்கு இரங்கும் தாய் பசுவை போன்று தாயுள்ளம் கொண்ட தயாபரன் அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

எவ்வாறு என்றால் நீங்கள் மாமுனிவனாகிய என்னுடைய புத்திரர்கள். தெய்வப் பிறப்பெடுத்தவர்கள். மலையாதீர்கள். மனதை அலைய விடாதீர்கள். நான் இந்த பூமியில் வந்து இத்தனை நாள் வரைக்கும் கைப்பொருளுக்கு இச்சை கொண்டு கைகூலி வாங்கி கருமம் செய்திருந்தேன் ஆனால் இந்த குவாலயத்தில் இனி வரமாட்டேன். ஆனால் தர்மம் நிச்சயத்து தாரணியில் வந்தது உண்மையானால் நன்மை கடைபிடித்து நிச்சயம் நான் வருவேன். ஆகவே நீங்கள் பதற வேண்டாம் என்று க் மக்களுக்கு ஆறுதல் கூறினார் அய்யா .

இவ்வுலக மக்கள் அனைவரையும் கலி என்னும் மாய வல்லிருந்து விடுவித்து பேரின்ப வாழ்வாகிய தர்மயுக வாழ்வை அருள வந்தவர். அவ்வாறு நன்மை கடைப்பிடித்து நான் வந்த காரணத்தால் நீங்கள் பதற வேண்டாம் என்று ஆறுதல் கூறினார்.

ஒன்றுக்கும் அலைய வேண்டாம் சான்றோர் மக்களே!. என்றைக்கும் நான் உங்களோடு இருந்து உங்களை ஆட்சி புரிகிறேன். ஒரு குடைக்குள் இந்த உலகை நாம் எல்லோரும்மாக இருந்த ஆளலாம். ஆகவே நீங்கள் வேதனை அடைய வேண்டாம்.

ஒன்றுக்கும் அலைய வேண்டாம் யுகபர நாதன் ஆணை. என்றைக்கு மலையின் மீது ஏற்றிய தீபமானது எப்படி எல்லோருக்கும் சுடர் விட்டு வழி காட்டுமோ அதுபோலவும், கன்றுக்கு பாலு போலவும், கண்ணுக்கு புருவம் போலவும் என்றைக்கும் உங்களிடமிருந்து நான் அரசு ஆளுவேன் என்று சான்றோர் மக்களை அமைதிப்படுத்தினார் வைகுண்டர்.

முன் விதியால் இந்த கலிநீச பாவி கையால் நான் இப்படி வேதனைகள் பட வேண்டி இருக்கிறது. காரணம் முன்முறை என்று சொல்லப்படுகின்ற போது குறோனி என்னும் அசுர சக்தி இந்த உலகில் என்றைக்கு வெளிப்பட்டதோ அன்றைக்கு அசுர சக்தியை அழிப்பதற்காக ஆறு பிரிவுகளாக பிரித்து அழித்தேன். அப்போது சிவபெருமான் யுகாயுகங்கள் தோறும் இந்த தீய சக்தியை அழிக்கின்றது வரையிலும் நீர் நல்லவராக தோன்றி அழிக்க வேண்டும் என்றுச் சொன்னார். அந்த நிலையின் படி அந்த அசுர சக்தியை யுகாயுகங்கள் தோறும் தோன்ற வைத்து அழித்து நிறைவாக கலியுகத்தில் முடியடி வேரில்லாமல் முற்றிலுமாக ஒழித்து நரகத்தில் இட்டு , நல்லோரை தேர்ந்து எடுத்து சுத்த யுகம் ஆக்கி தர்மபுரி ராஜ்யத்தில் வைத்து ஒரு குடைக்குள் ஆள்வதற்க்காக ஏற்றுக் கொண்ட நியதியின் படி இது இங்கே நடக்கிறது.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக வந்தவர் அய்யா வைகுண்டர். தீமையை அழித்து தர்மத்தை நிலை நாட்ட வந்த அய்யா வைகுண்டரை அழிப்பது என்பது இயலாத காரியம். அவரை யாரும் எதுவும் செய்து விட முடியாது. ஆனால் அழிவு ஒன்றை பரிசாக பெறப்போகின்ற கலிநீசன் அவரை பலவாறு ஏசி பேசி அவனுக்கு அழிவு வருவதை அறிந்து கொள்ளாமல் அவரை தொட்டு அடித்து துன்பப்படுத்துகின்றான். இதனால் வேதனைப்படுவது அழியப்போவது கலிநீசன் தானே அல்லாமல் சான்றோர்களோ வைகுண்டரோ இல்லை என்பதை இங்கே தெளிவாக வெளிப்படுத்தி நம் சான்றோர் மக்களை அமைதி படுத்தினார் அய்யா வைகுண்டர்.

## Chpter 2
## சுவாமி கைது

நடை

என்று மகிழ்ந்து எம்பெருமா ளுள்ளடக்கி
மன்று தனையளந்த மாலோன் நடக்கலுற்றார்
கெட்டினக் கெட்டைக் கிறுக்க முடனிறுக்கிக்
கட்டினக் கட்டோடே கடுநீசன் தானடத்தி
ஏசுவார் மாயவரை எறிவார்காண் மாயவரைப்
பேசுவார் மாயவரைப் பேயனென்பார் மாயவரை
இப்படியே நீசக் குலங்களெல்லா மாயவரை
அப்படியே பேசி அடித்து மிகநடத்தி
நீசக் குலமிருக்கும் நெடுந்தெருக்க ளூர்வழியே
பாசக் கயிறோடு பகற்கள்ள னைப்போலே
தெருவுக்குத் தெருவு சிறுகுழந்தை நீசர்குலம்
வருகின்ற மாயவரை மண்கட்டி பேர்த்தெறிவார்
தலையைப் பிடித்திழுப்பார் சடைப்பேயன் பேயனென்பார்
இலைசருகு போலே எரியுகின்ற சாதியெல்லாம்
குண்டியிலே யொருவன் கோல்கொண்டு குத்திடுவான்
நொண்டியோ வென்று நெளியிலே குத்திடுவான்
நம்மள் குலத்தை நாணங் கெடுக்கவந்த
பம்பக் குறும்பேயன் பம்பைதனைப் பின்னுமென்பார்
அதிலுஞ் சிலபேர் அடடாபோ என்றிடுவார்
மதிலேறி வந்து மாமட வார்சிலர்கள்
இவன்தா னடியோ என்னையுமே ஆடவைத்துச்
சவந்தனையே சுட்டதுபோல் தான்சுட்டப் பேயனிவன்
தலைமயிரைப் பனையில் தான்பங்கு வைத்திறுக்கிக்
குலையக் குலையக் கொன்னகொடும் பாவியிவன்
என்று எறிவாள் இவள்சிலர்க ளம்மானை
அன்றுதுகள் கண்டு அதிலுஞ் சிலமடவார்
ஆமடியோவுங்களையும் அழைத்தானோ வீட்டில்வந்து
ஓமடியோ இந்த இறுமாப்புப் பேசாதுங்கோ
அன்றைக் கவனை அடிபணிந்து நின்றுகொண்டு
இன்றைக் கவனை எறியத் தொடர்ந்தாயோ
என்று சிலபேர் எறியாதே யென்றுரைப்பார்
நன்று நன்றென்று நாரணரு முள்ளடக்கி
ஒருதிக் கொருதி உரைத்திடுகோவெனவே
கருதிமுகம் பாராமல் கண்ணர் மிகநடந்தார்
பாவிக் குலங்கள் பச்சைமால் நாரணரை
தாவிச் சுசீந்திரத் தலம்நோக்கிக் கொண்டுசென்றார்

விளக்கம்:

இவ்வாறு வைகுண்டர் கலிநீசனுக்கு அழிவு வருவதை எண்ணி மகிழ்ந்து உள்ளடக்கி மன்றுதனை அளந்த மாயன் நடக்கலுற்றார். கட்டின கட்டோடு நடந்து செல்லும் மாயவரை கல்கொண்டு எறிவார் பலர். பேயன் பைத்தியக்காரன் என பேசுவார் பலர்.

இப்படியே அவரே ஏசி பேசி அடித்து துன்புறுத்தி நீசக்குலம் இருக்கும் நெடும் தெருக்கள் இருக்கும் ஊர் வழியே பாச கயிற்றோடு பகற் கள்ளணைப் போல இழுத்துச் சென்றார்கள். கலிநீச குலத்தில் உள்ள குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் அவரை மண்கட்டி பெயர்த்து எறிந்தனர். தலை மயிரை பிடித்து இழுத்தனர். சடைப்பேன் எனப் பேசினர். இப்படி அய்யா வைகுண்டரை துன்புறுத்தியவர்களை அகிலம். இலை சருகு போல் எரிகின்ற சாதி என்கிறது. சருகை எரித்தால் கரியும் மிஞ்சாதே. அதுபோல கலிச்சாதி தன்வினையால் தான்கட்டு ஒட்டுமொத்தமாக அழிந்து போகும் என்பதை இங்கே சுட்டிக்காட்டுகிறது.

இவ்வாறு அய்யாவை கொடுமைப்படுத்தியபடி நமது குலத்தை நாணம் கெடுக்க வந்த பம்பன் குறும் பேயன். இவன் பம்பைதனை பின்னுங்கள் என்று கொக்கரித்துக் கொண்டு சுசீந்திரம் நோக்கி இழுத்து சென்றார்கள். அவ்வாறு இழுத்து செல்லுகின்ற போது பெண்கள் சிலர் மதில் ஏறி வந்து இவன்தான் அடியோ என்னையும் ஆடவைத்து சவத்தை சுட்டது போல தான் சுட்ட பேய் இவன். என்னுடைய தலைமைகளை பனையில் வைத்து கட்டி இறக்கி குலைய குலைய கொன்றிடும் பாவி இவன் என்று இகழ்ந்தார்கள் சில பெண்கள்.

அது கண்டு இன்னும் சில பெண்கள் ஆம்மடியோ உங்களையும் அவர் வீட்டில் வந்து அழைத்தாரா?. இப்படி இந்த இறுமாப்பு பேசாதீங்கோ!. உங்களுடைய வினை தீருவதற்காக நீங்கள் அவரை நாடி சென்று விட்டு இப்போது அவரை நீங்கள் கள்வனை போல பேசுவது சரியா? இவ்வாறு சில பேர் பேசுவது தகாத காரியம் என்று எச்சரித்தார்கள். அப்போது வைகுண்டர் மனதிலே நன்கு அடக்கிக் கொண்டு ஒருத்திக்கு ஒருத்தி நீங்கள் மாறி பேசி உரைத்திடுங்கோ என்று யாருடைய முகமும் பாராமல் கண்ணர் மிக்க நடந்தார். பாவி நீச குலங்கள் பச்சைமால் நாராயணரை சுசீந்திரம் கொண்டு சென்றார்கள். பல வேதனைகளை எல்லாம் செய்தான். இவ்வாறு மாயாவி கொண்டு வந்து வைகுண்டரை கலிராசன் முன்னே கொண்டு வந்து அய்யாவை நிறுத்தினார்கள்.

## சுசீந்திரத்தில் அய்யா

கொண்டுபோ கும்வேளை கொடும்பாவி நெட்டூரன்
விண்டுரைக்கக் கூடாத வேதனைகள் செய்யலுற்றான்
அய்யய்யோ மாயவரை அன்னீத மாபாவி
செய்த வினையெல்லாம் சொல்ல முடியாதே
கொண்டுவிட்டு மாயவரைக் கூண்டகலி ராசன்முன்னே
கண்டு கலிராசன் கருத்தில் மிகத்தேர்ந்து
பார்ப்போம் பரிட்சை பயித்தியக்கா ரனுடனே
தாற்பரிய மாகத் தன்விரலின் மோதிரத்தைக்
கழற்றி யொருவர் காணாமல் கையடக்கிச்
சழத்தி வருவது தானறியா நீசன்வன்
ஏதடா என்றன் கைக்குள் ளிருப்பதையும்
ஓதடா வுன்றன் உற்ற வலுவாலே
அப்போது மாயன் அடக்க மிக அறிந்து
இப்போ துரைத்தால் இந்தநீ சக்குலங்கள்
கண்டு பிடித்துக் கட்டுவார் நம்மையுமே
தொண்டுசெய்யுஞ் சான்றோர் துயரமது மாறாது

நாம்நினைத்தக் காரியமும் நடந்திடா தானதினால்
ஏனிதைத்தான் சொல்லப் போறோ மெனஅடக்கி
எல்லாம் படைத்த ஏகன் கிருபையென
அல்லா நினைத்தபடி ஆகு மெனவுரைத்தார்
அப்போது நீசன் அவன்வெகுளி யாயுரைப்பான்
இப்போ தொருமருட்டாய் இவன்சமைந்தான் சுவாமியென்று
மருளிதுதா னென்று மாநீசன் தான்மருண்டு
கொண்டுபோங் கோசறடன் கூண்டவன் முன்பதிலே
என்றுரைத்த போது ஏவல்சீவா யிகளும்
நடத்தி யிழுத்து நாரா யணரையுமோ
கடத்திச் சறடன் கண்டிருக்கக் கொண்டுவிட்டார்
உடனே சறடன் உபாயமதைப் பார்ப்போமென்று
தடதடென எழுந்து சாராய மானதிலே
அஞ்சுவகை நஞ்சு அதில்கலந்தான் மாபாவி
நஞ்சில்லை யென்று நல்லபா லென்றீந்தான்
பாலென்ற போது பச்சைநா தன்மகிழ்ந்து
காலனைக்கா லாலுதைத்தக் கடவுளார் தாமகிழ்ந்து
வேண்டி யகமேற்றார் வேதநா ராயணரும்
ஆண்டி யதனால் அஞ்சா திருப்பதையும்
பார்த்துச் சறடன் பண்நா யகமகிழ்ந்து
வேற்றொரு சூட்சம் வேறேயுண் டாகுமென
என்னமோ என்று இவனுணர்ந்துப் பாராமல்
பொன்னர் மயக்கம் பெரிய மயக்கமதால்
கொடுபோங் கோவென்று கூறினான் சேவகநாடு
வெடுவாகக் கொண்டு வெறுநீசன் டாணாவில்
அடைத்துவைத் தானங்கே அன்னீத மாபாவி
திடத்தமுடன் நாரணரும் சிந்தைமிக மகிழ்ந்து
இருந்தா ரேயங்கே ஏழைக்கிரங்கி யவர்
தருந்தார ருக்காகத் தடியிரும்பி லுமிருந்தார்
சான்றோருக்காகத் தடியிரும்பிலுமிருந்து
மாண்டோ ரையுமெழுப்பும் மாய வலுவாண்டி
அய்யோ அவரை அடைத்துவைத் தேயிருந்த
பொய்யோ புரைக்குள் பொறுக்குமோ கண்ணுகண்டால்
மோளுக் குழியும் மொய்த்தத்தெள் ளினங்களுமாய்த்
தோளு வழியே சொரியுதே தெள்ளினங்கள்
அட்டை மிதக்க அரியத்தேள் ஈமிதிக்க
விட்ட நரகு மிகுவாய்ப் புழுமிதக்க
நாற்றத் துறைகள் நரகத் துறைபோலே
பார்த்த இடமெல்லாம் பலபுழுக்க ளுஞ்சரிய
ஐயோ அய்யாவை அடைத்தப் புரையதிலே
கையாடி நிற்கக் காரணமோ மாயவர்க்கு
சான்றோ ருக்காகத் தர்மக் குருநாதன்

மீன்று முழியாமல் முகமலர்ந் தங்கிருந்தார்
ஏழை களுக்காக ஈரொன்றொரு நாளாய்
மீளாச் சிலுவையிலே முள்ளா லடிகள்பட்டு
மரித்துப் பிறந்ததுபோல் மாயக் குருநாதன்
இதுவுகத்துக் கிப்புரையில் இருந்து அழுந்தவென்று
இருந்தாரே மாயவனார் ஏழைகளுக் காயிரங்கிக்
கருந்தார மார்பன் கருத்தில் மிக அடக்கி
எல்லா மடக்கி இவரிருக்கும் நாளையிலே
பொல்லாக் கலியன் புறப்பட்டான் மேற்கெனவே

**விளக்கம்**:

அப்போது அந்த கலி மன்னன் வைகுண்டரை சோதிக்க வேண்டும் ஆகவே ஒரு பல பரிட்சை பார்ப்போம் என்று எண்ணி தன்னுடைய கை விரலில் இருந்த மோதிரத்தை கழட்டி கையில் மறைத்து வைத்துக்கொண்டு ஓதடா என்னுடைய கைக்குள் இருக்கின்றது என்ன என்பதை உன்னுடைய உபாயத்தாலே என்று கலி நீச மன்னன் வைகுண்டரிடம் கேட்டான். அப்போது வைகுண்டர் இப்போது நாம் கூறினால் சான்றோர் மக்களுடைய துயரமும் மாறாது .

கலிநீசனும் நம்மை கண்டு கொள்ளுவான். தொண்டு செய்யும் சான்றோர்களுடைய துயரமும் மாறாது. நாம் நம்பி வந்த காரியமும் நடவாமல் போய்விடும். ஆகவே நாம் இதை சொல்ல வேண்டாம் என்று மனதிலே நினைத்து, அந்த கலி மன்னனிடம் ஏகம்படைத்த ஏகன் கிருபை என அல்லா நினைத்தபடி ஆகுமென உரைத்தார். அப்போது வைகுண்டர் உடைய பதிலைக் கேட்டவுடன் மன்னன் கோபமடைந்து இவன் சுவாமி என்று சொல்லி ஏமாற்றுகிறான்.

இவனை கொன்றுவிட வேண்டும் என்று எண்ணி இவனை கொண்டு போய் நமது சேனாதிபதியாக சறடண் முன்பு நிறுத்துங்கள் என்று கட்டளையிட்டான். உடனே சுவாமி வைகுண்டர் சறடண் முன்பு கொண்டு நிறுத்தப்பட்டார். உடனே அவன் ஐந்து வகையான கடுமையான நஞ்சை சாராயத்தில் கலந்து இதை பால் என்றுக் குடியுங்கள் என்று வைகுண்டரிடம் கொடுத்தான். அப்போது வைகுண்டர் அதை நல்ல பால் என்றுக் கொடுத்தான். பால் என்ற போது பச்சைநாதன் மகிழ்ந்து காலனை காலால் உதைத்த கடவுளார் தான் மகிழ்ந்து அகமேற்றார். ( வேத நாராயணராகிய ஸ்ரீஹரியும், மார்க்கண்டேயனை காலனின் பிடியிலிருந்து காத்த நாயகனும் ஒருவரே என்பதை இவ்வரிகள் நமக்கு சுட்டிக்காட்டுகிறது. இப்போது கலி மன்னனின் முன்பு நிற்கும் வைகுண்ட பரம்பொருளும் ஒன்றே என்பதை இங்கு சுட்டிக் காட்டினார்). ஆகையால் இந்த விஷம் ஒன்றும் பரம்பொருளை ஒன்றும் செய்துவிட முடியாது. அதை நிரூபிக்கும் விதமாக கலி நீசர்கள் கொடுத்த விஷம் அய்யாவை ஒன்றும் செய்துவிட வில்லை.

ஆனால் அந்த நீச பாவிகளால் இதனை உணர முடியவில்லை. ஆணவமும், ஜாதி வெறியும் அவர்களின் அறிவை மறைத்தது. பொன்னர் மயக்கம் பெரிய மயக்கமதால் அவர்களால் அவரை அறிய முடியவில்லை. மாயையின் கவர்ச்சிக்கு உட்பட்டவர்களால் அறிய முடியாது. பச்சை நாவியே பால் என்று கொடுத்த பாதகர்கள் அவரை புழுக்கள் மிதக்கும் அறையில் அடைத்து அதைத்தார்கள்.

மாண்டோரை எழுப்பும் மாயவலுவாண்டி ஏழை சான்றோர்களுக்காக இறங்கி தடி இரும்பிலும் இருந்தார். இந்த மலசலம் கழிக்கும் கழிப்பிடத்தில் அய்யாவை

அடைத்தார்கள். தெள்ளினங்களும் அட்டைகளும் புழுக்களும் தேள் போன்ற விஷ ஜந்துக்களும் அவரை சூழ்ந்து கொண்டு துன்பப்படுத்தின. மோழுக்குழிக்குள் இருந்த புழுக்கள் அய்யாவின் தோள் மீது ஊர்ந்து திரிந்தன. கருணையே உருவான தருந்தாரமார்பனாகிய பிறப்பில்லாத பிரணவ சொரூபம், தர்மம் நினைத்து நாற்றத் துறையும் நரகத்துறைகள் போல் இருந்த அந்த துறைக்குள் பொறுமையையாக அமர்ந்திருந்தார். மேலும் பல சோதனைகள் வைகுண்டரை செய்தார்கள்.

வத்தல் புகையை போட்டு அந்த அறையில் அடைத்து துன்பப்படுத்தினார்கள். நெய் ஊற்றி கட்டையடிக்கி அதில் தீயை ஏற்றி வைத்து அதில் நீந்திக்கொள் என்று சொல்லி அந்த நெருப்பிலே தூக்கி எறிந்தார்கள். சுண்ணாம்பு சூளவாயில் தூக்கி எறிந்து அய்யாவை பலவாறு துன்பப்படுத்தினார்கள். ஆனால் எல்லாவற்றிலிருந்தும் எம்பெருமான் எந்தவித வேதனையும் படாமல் அவர் கலிநீசன் செய்த சோதனைகளைச் சாதனையாக்கி காட்டினார். இவ்வாறு கலிநீசன் செய்த சோதனைகளை வென்று முகம் மலர்ச்சியோடு இருந்தார்.

ஏழைகளுக்காக இரங்கி மூன்று நாளாக முள்ளால் அடிகள்பட்டு மரித்து பிறந்தது போல் மாயக்குருநாதன் இவ்வுகத்தில் இப்புரைக்குள் இருந்து அழுந்த வேண்டியது என்று மாயவனார் ஏழைகளுக்காக இரங்கி இருந்தார். என்னையல்லால் தெய்வம் வேறு இருக்கிறதோ இந்த வையகத்தில் என்றுக் கூறி எம்பெருமான் அன்றைக்கு யூதர்களுக்காக இயேசு பெருமானாக வந்து சிலுவையில் அடிகள் பட்டு ஏழைகளுக்காக வருந்தி இருந்த மாயக் குருநாதனைப் போல் இப்போது நீசர்கள் துன்புறுத்துகிறார்கள் என்பதை வெளிப்படுத்தினார்.

இவ்வாறு நீசர்கள் செய்த கொடுமைகளைத் தாங்கி கொண்டு ஏழை மக்களுக்காக வேண்டி இரங்கி கருத்தாக எல்லாம் மனதில் எண்ணி மனதில் அடக்கிக் கொண்டு நீசர்கள் செய்த கொடுமைகளை தாங்கி கொண்டு அவர்கள் செய்த கொடுமைகளின் மூலமே அவர்களுக்கு அழிவு வருகிறது என்பதை எண்ணி மனதில் அடக்கிக்கொண்டு எம்பெருமான் அமைதியாக . அப்படி இருக்கின்ற போது மேலும் பல சோதனைகள் செய்ய வேண்டும் என்று அனந்தபுரத்திற்கு அழைத்து செல்வதற்கு தயாரானார்.

Chapter 3

## அய்யாவை அனந்தபுரம் கொண்டு செல்லல்

இப்பே யனையும் இங்கேகொடு வாருமென்று
அப்போது சொல்லி அவனடந்தான் மேற்கெனவே
உடனே சிவாயி உற்றநா ராயணரைத்
திடமாகக் கூட்டிச் சிணமே நடக்கலுற்றான்
கொண்டு போனாரே கோட்டாற்று ஊரோடே
கண்டுபெரும் பாவியெல்லாம் கட்டிகொண்டு தானெறிய
எறிவார் சிலபேர் ஏசுவா ரேசிலபேர்
வெறிப்பேய னென்று விரட்டி மிகஎறியார்
எல்லாம் பொறுதியுடன் எம்பெருமா ளுமடக்கிக்
கல்லாரை யெல்லாம் கமக்கியறுப் பேனென்று
மனதி லடக்கி மாய நெடுமாலும்
கனகத் திருமேனி கண்கவிழ்ந் தேநடந்தார்

நடந்தாரே கோட்டாறு நல்ல பிடாகைவிட்டுக்
கடந்தாரே சுங்கான் கடையெல்கைத் தானும்விட்டுப்
பத்மனா புரத்தெல்கைப் பார்த்துத் தெருவோடே
உற்பனமாய் மாயன் உள்தெருவோ டேநடக்க
ஆகாத பாவியெல்லாம் அவரைக்கண் டேபழித்து
வாகாகப் பேசி வைதாரே நீசரெல்லாம்
அதிலு மன்போர்கள் அவரைக்கண் டேபணிந்து
இதுநாள் வரையும் இவர்நடந்த சட்டமதில்
பொல்லாங்கு செய்தாரெனப் பேருநாம் கேட்டதில்லை
எல்லாங் கடைதலைக்கு இட்டதர்ம மேகாக்கும்
என்றன்போர் சொல்லி இவரழுது நின்றராம்
அன்றந்த நாதன் அதுகடந்துப் போயினரே
போனாரே தக்கலையின் புரைக்குள்ளே யுமிருந்து
மானான பொன்மேனி வாலரா மங்கடந்து
வாரிக் கரையும் வாய்த்த நதிக்கரையும்
சீரிய நாதன் சென்றகண் டேநடந்தார்
நடந்துத் திருவனந்தம் நல்லபுரத் தெல்கைகண்டு
அடர்ந்த மரச்சோலை அடவி வனங்கள் கண்டு
கண்டுகொண் டெம்பெருமாள் கண்கொள்ளாக் காட்சியுடன்
பண்டுநாம் சீரங்கத்தைப் பார்த்தகன் றேநடந்து
இவ்வூரைக் கண்டு எத்தனைநா ளாச்சுதென்று
செவ்வுமகா விட்டிணுவும் சிந்தைக்குள் ளேயடக்கி
சிங்காரத் தோப்பில் சுவாமி சிறை
அவ்வூரைப் பாராமல் அந்த வனமானதுக்குள்
எவ்வுயிர்க்குந் தானாய் ஈயுகின்ற பெம்மானும்
நாட்டுக் கலியனுக்காய் நற்சோத னையெனவே
நீட்டின காலில் நீசனிட்ட விலங்கோடே
ஏழைகளுக் காக இருந்தார்பா ராவதிலே
கோழைக் குடும்பக் குறும்பர் தமைவதைக்க
மனுப்பா ராவதிலே மாயாண்டி தானிருந்தார்
தனுப்பா ரமடக்கித் தாழ்மையுட னேயிருக்க
ஆகாத நீசன் அழியும் நினைவதினால்
போகாத படிக்குப் பேயன் தனைவிலங்கில்
போட்டு வையென்றும் புள்ளி பதனமென்றும்
கோட்டுக்கா ரர்தமக்குக் கொடுத்தானே வுத்தரவு
அந்தக் கலிராசன் அவனுரைத்த வுத்தரம்போல்
சந்தமுனி மாயனையும் தான்விலங்கி லிட்டுவைத்தான்
அப்போது மாயன் அதிகசான் றோர்களுக்காய்
இப்போ பொறுதிகொண்டு இருக்கே னெனஇருந்தார்
நாட்டுச் சோதனைக்காய் நாராயணர் விலங்கில்
நீட்டின காலோடே நிலம்பார்த் தேயிருந்தார்
சாணான் பால்வைத்துச் சந்தோசப் பாலேற்று

நாணாம லெம்பெருமாள் நற்சோலையி லிருந்தார்
சோலையில் வாழ்பறவை சாமிவந்தா ரென்றுசொல்லி
ஏலேல முங்கூறி எந்நேர முந்தொழுது
நன்றான மாமுனியும் நற்பறவை யானதுவும்
கொண்டாடிக் கொண்டாடிக் கொஞ்சிவிளை யாடிருக்கும்
இந்தவனச் சோலையிலே எம்பெருமாள் தானிருக்க
சந்த முடனருட்கள் சதாகோடி யாகவந்து
தொழுது நமஸ்கரித்துத் தூயோன் பதம்பூண்டு
முழுது முன்பாதமென மொய்குழ லார்சிலர்கள்
நாற்பது வயசாய் நான்சேயில் லாதிருந்தேன்
காப்பதுன் பாதமெனக் கண்டு தொழுதபின்பு
தந்தாரே யெங்களுக்குச் சந்ததி தழைத்தோங்க
வந்தாரே நாயடியார் வாழு மனையிடத்தில்
என்ன உபகாரம் இவர்க்குநாம் செய்வோமென்று
கன்னல் கதலிக் கனிகள் கொடுப்போமோ
தர்ம மால்தீர்த்தச் சஞ்சலங்க ளானதையும்
அம்மம்மா சொல்ல ஆராலு முடியுமோடி
குட்டம் பதினெட்டும் குடித்தபத மொன்றாலே
கட்டம் முதலாய்க் காணாப் பறந்ததுவே
இப்புதுமை செய்தவர்க்கு இப்போ தொருபுதுமை
கொப்பளிக்கு முன்னே கூடா தோஇவரால்

விளக்கம்:

அதன்படி இப்போது இவனை இங்கிருந்து அனந்தபுரம் கொண்டு செல்ல வேண்டும் அதற்காக கட்டியிறுக்கி கொண்டு வாருங்கள் என்று மன்னன் கட்டளையிட அதன்படி படைவீரர்கள் உடனே நாராயணரே சினமாக கூட்டி இழுத்துச் சென்றார்கள். அவ்வாறு இழுத்து போகின்ற போது கோட்டாறு ஊரோடு கொண்டும் போகும் போது பெரும் பாவி எல்லாம் கட்டிக்கொண்டு தான் எறிந்தார்கள். சில பேர்கள் அய்யாவை ஏசினார்கள்.

சில பேர்கள் வெறி பேயன் பேயன் என்று பேசி விரட்டி மிக . எல்லாவற்றையும் எம் பெருமான் உள்ளத்தில் அடக்கி கல்லாரை எல்லாம் கசக்கி அறுப்பேன் என்று மனதில் அடக்கி மாய திருநெடுமால் கனத்த திருமேனி கண்கவிழ்ந்து தான் நடந்தார். அவ்வாறு கோட்டார் நல்ல பிடாகை விட்டு சுங்கான் கடை எல்கையை தாண்டி பத்மநாபபுர எல்கையைப் பார்த்து அந்த தெருவோடும், உள்தெருவோட நடக்க நீச பாவிகள் எல்லாம் அவரை கண்டே பழித்து வாயார பேசி வைதார்கள்.

அதிலும் சில பேர் அய்யாவை கண்டு பணிந்து இதுநாள் வரையும் இவர் நடந்த சட்டம் அதில் பொல்லாங்கு செய்தார் என பேரு நான் கேட்டதில்லை. எல்லாம் கடைத்தலைக்கு இட்ட தர்மமே காக்கும் என்று அன்போடு சொல்லி அழுது அழுது நின்றார்கள். அவ்வாறு நடக்கின்ற போது அதை கடந்து எம்பெருமான் தக்கலையில் வைத்து செய்த சோதனைகளை வென்று பின்னர் அனந்தபுரம் நோக்கி கொண்டுச் சென்றனர்.

அனந்தபுரம் நோக்கி செல்லுகின்ற போது நாராயண மூர்த்தி வாரிக்கரையும் வாய்த்த நதிக்கரையும் சீரிய நாதன் கண்டு கொண்டே நடந்தார். திருவனந்தபுரத்தினுடைய எல்லையை கண்டு அடர்ந்த மலர் சோலை அடவி வனங்களை கடந்து எம்பெருமான்

அந்த கண்கொள்ளாக் காட்சிகளை எல்லாம் கண்டு, ஸ்ரீரங்கத்தை போன்ற சிறப்புடைய சோலைகளைப் பார்த்தது இவ்வூரை கண்டு எத்தனை நாள் ஆச்சு என்று சிந்தையில் நினைத்துக் கொண்டு எம்பெருமான் அந்த வனத்திற்குச் சென்று எவ்வுயிர்க்கும் தானாக இருக்கின்ற எம்பெருமான் நாட்டு கலியனுக்காக நற் சோதனையெனவே அனந்தபுரம் சேர்ந்த உடன் அங்கு நீசர்கள் இட்ட விலங்கோடு ஏழைகளுக்காக அந்த பாராவதிலே இருந்தார்.

கலி நீச மன்னன் காவலர்களை அழைத்து இந்த குறும்பன் வெறும் பேயனானவன் தப்பி விடாதபடி இவனை பெரு விலங்கில் போட்டு வையுங்கள் என்று அங்கே கட்டளையிட்டான். அதன்படி அந்த நீசர்கள் அய்யாவை கை கால்களில் விலங்கை மாட்டி வைத்தார்கள். அப்போது மாயன் அதிசய சான்றோர்களுக்காக இப்பொழுது பொறுதிக் கொண்டு இங்கே இருக்கிறேன் என நாட்டு சோதனைக்காக நாராயணர் விலங்கில் நீட்டின காலோடு நிலம் பார்த்து இருந்தார்.

அவ்வாறு இருக்கின்ற அந்த நேரத்திலே அய்யாவினால் நன்மை பெற்ற சான்றோர்கள் அய்யாவை நாடி வந்தார்கள். அய்யாவிற்கு பால் வைத்து கொடுத்து பணிந்து சென்றார்கள். சான்றோர் மக்கள் வைத்து கொடுத்த சந்தோசபாலை நாணாமல் எம்பெருமான் ஏற்று சோலையிலே இருந்தார். அப்போது சோலையிலே வாழுகின்ற பறவைகள் எல்லாம் சுவாமி வந்தார் என்று சொல்லி ஏலேலமும் கூறி எந்நேரமும் தொழுது கொண்டாடி கொண்டாடி கொஞ்சி விளையாடி இருந்தன. அவ்வாறு அந்த வனத்திலே எம்பெருமான் இருக்க, சந்தமுடனே நல்ல மக்களும், அய்யாவினால் அருள் பெற்ற சான்றார் குல மக்களும் அய்யாவே நாடி வந்து தொழுது நமஸ்கரித்து பணிந்து நின்றார் கள்.

அவ்வாறு சான்றோர் மக்கள் பணிந்து நிற்கின்ற போது சில பெண்கள் நாற்பது வயதாய் நான் பிள்ளை இல்லாமல் இருந்தேன். அய்யாவை நாடி தொழுத பின்பு எங்களுக்கு சந்ததிகளைத் தான் கொடுத்தார். ஆகவே நாங்கள் வாழும் மனையிடத்தில் அவருக்கு உபகாரம் செய்வோம் என்று கன்னல் கதலி கனிகள் கொடுத்து மகிழ்ந்தார்கள். தர்மமதால் எங்களுடைய சஞ்சலங்களை எல்லாம் தீர்த்தார். குட்டம் பதினெட்டும் குடித்த பதம் ஒன்றில் கட்டம் முதலாய் காணா பறந்ததுவே. இத்தனை புதுமை செய்தவருக்கு இப்போது இந்த நீசர்கள் செய்கின்ற கொடுமையை தகர்த்து எறிவதற்கு ஒரு நொடி போதும். ஆனால் இவர் ஏதோ பம்மலாக இருக்கிறார் என்றால் இவர்களுக்கு சூதால் கொடுமை வந்து சுற்றும் இந்த நீசர்களுக்கு என்று கூறி அய்யாவை பணிந்து நின்றார்கள்.

சில பெண்கள் அய்யாவினுடைய அருளை பெற்று நின்றதையும், அய்யாவினால் பலன் பெற்றதையும், அய்யாவிடம் எல்லாவித சக்தியும் இருக்கிறது என்பதையும் நம்பி அங்கே சொல்லிக் கொண்டு வந்தார்கள். அய்யாவினால் பலன் பெற்றவர்கள் செய்த நன்றி சொல்லியவர் கூரைக்குப் போக நினைவில்லாமல் அப்படியே சூழ்ந்து நின்று நமஸ்காரம் செய்து நின்றார்கள்.

கடுவாய் சோதனை

ஏதோ வொருதொழிலாய் இவர்பம்ம லாயிருக்கார்
சூதால் கொடுமைவந்து சுற்றுங்காண் நீசனுக்கு
என்று சிலபெண்கள் ஏழைபங் கோனருளை
கண்டு தொழுது கருத்தகலா நின்றுடுவார்

அப்படியே நருட்கள் ஆதிநா ராயணரை
செப்படிபோ லவர்க்குச் செய்தநன்றி சொல்லியவர்
கூரைக்குப் போகக் கூறநினை வில்லாமல்
நாரணரைச் சூழ்ந்து நமஸ்காரஞ் செய்துநிற்பார்
சூழ்ந்து நருட்கள் தொழுதுமிக நிற்கையிலே
தாழ்ந்துசா குங்கலியன் சறடன் தனைநோக்கிப்
பேயனொரு சாணானைப் பிடித்துக்கொடு வந்தோமே
தூய இரும்பு விலங்கதிலே போட்டுவைத்தோம்
சாமியென்று பாவித்தச் சாணான்தனை நாமும்
காமியத் தால்பெருத்தக் கடுவாய் தனைவருத்தி
ஏவிவிட்டுப் பார்த்து இருவகையுந் தானறிந்து
போவெனவே சொல்லிப் பேயன் தனையனுப்ப
வேணுமே யிப்போ விவரமென்ன என்றுரைத்தான்
ஆணுவ மூர்க்க அரச னிதுவுரைக்க
நல்லதுதா னென்று நாட்டமுற் றுச்சறடன்
வல்லபெலச் சேவுகரை வாவென் றருகழைத்து
இப்போ தொருநொடியில் ஏழுமலை யுந்தேடி
வெற்போடு வெற்பெல்லாம் வேக முடன்தேடி
வேகம் பெரிய வேங்கைகடு வாய்பார்த்து
நாகமதிலுங் கடிய நல்லகடு வாய்பார்த்து
நாழிகை ஏழதுக்குள் நம்மிடத்தில் கொண்டுவரத்
தூளி யதுபறக்கும் சூறா வளியதுபோல்
கொண்டு வாவெனக் கூறிச் சறடனுமே
விண்டுரைப்பான் பின்னும் வீரியமாய்ச் சேவுகர்க்கு
நன்று மொழிகேளும் நல்வீரச் சேவுகரே
இன்றேழு மணிக்கு இங்கேகொண்டு வராட்டால்
தூக்கியே வுங்களையும் தூண்டலில் போட்டிடுவேன்
ஆக்கினைகள் செய்துவுங்கள் ஆமிசத்தை வாங்கிடுவோம்
என்று சொல்லிச் சேவுகரை இறுக்கமுட னிறுக்கி
இன்றுபோ மெனவே ஏற்றவரி சைகொடுத்து
அனுப்பினாள் சேவுகரை அந்தவே ளைதனிலே
பனிப்பிசினும் வெயிலைக் கண்டு பதறினாற்போல்
பதறியே சேவகர்கள் பண்பாகச் சட்டையிட்டுக்
குதறியே வந்து கூண்டுரைப்பார் மாயவேனாடு
நாரா யணரே நாங்கள்போ குங்கருமம்
பேராய் நடக்கவேணும் பெரிய திருமாலே
உம்மைச்சோ தனைபார்க்க குங்கருமம் ஆனதினால்
செம்மையுள்ள ராசன் சிணமே யனுப்பினர்காண்
ஆனதினால் கடுவாய் அடியேங்கள் கையதிலே
போனவுடன் சிக்கிடவும் புண்ணியரே வந்தாரும்
என்றுரைக்கச் சேவுகர்கள் எம்பெருமா ளுள்ளமதில்
நன்று நன்றென்று நாரா யணர்சிரித்து

விடைகொடுத் தார்கடுவாய் வேகமதில் சிக்கிடவும்
படைச் சேவுக்கத்தார் பாரமலை தானேறி
கடுவாய் கிடக்கும் கனமலைகள் தான்தேடி
முடுகித் தலையாரி முடிச்சு வலைவளைந்து
காடு கலைத்துக் கடுநாய்கள் விட்டேவி
வேடுவர்க ளெல்லாம் விரைந்து கலைத்தனரே
கலைக்க வொருகடுவாய்க் கடுங்கோபங் கொண்டெழுந்து
வலைக்குள் நுழைந்ததுகாண் மாயவனார் தன்செயலால்
உடனேதான் சேவுகர்கள் ஓடிமிக வளைந்து
அடவுடனே வலையை அமர்த்தி மிகப்போட்டு
உபாயத்தாற் சென்று ஒருகூட்டுக் குள்ளடைத்துக்
கபாடத்தால் கட்டிக் கனகூடு தானெடுத்துத்
தாமரை குளத்துச் சன்னாசி பாதமதால்
நாமளு மன்னனுக்கு நாடிப் பிழைத்தோமென்றார்
நல்லவென்னி யுண்டு நற்சாணாச் சுவாமியிடம்
வல்லவர் தானென்று மாதவாய்க் கொண்டாடித்
தேடித் திரியாமல் திக்கெங்கும் வாடாமல்
ஓடித் திரியாமல் உயர்சாணாச் சாமியினால்
நாமும் பிழைத்தோம் நற்கடுவாய்க் கொண்டுவந்தோம்
சீமையாளு மரசன் செப்பும் வாக்குப்படியே
கடுவாயைக் கொண்டு காலமே போவோமென
வெடுவாகக் கூடதுக்குள் வேங்கை தனையமர்த்திச்
சுமந்துகொடு வந்தார் துடியான சேவுகர்கள்
அமர்ந்த கடுவாய் அதறுகின்ற வோசையினால்
நருட்கள் மிகப்பதறி நாற்கரைக்கு மாட்கள்விட்டு
வருகின்ற வேளை மாகோடி யாய்ச்சனங்கள்
சாமியென்ற சாணானைச் சோதிக்க வேணுமென்று
ஆமியமாய்க் கடுவாய் அதோகொண்டு வாறாரெனப்
பார்க்க வருஞ்சனங்கள் பலசாதி யுங்கோடி
போர்க்குத் திரள்போல் போற வகைபோலே
எண்ணிறந்த நருட்கள் இதிற்கூடி வந்தனரே
மண்ணளந்த நாதன் மனமகிழ்ந் தேயிருந்து
சாமி யருகில் சூழ்ந்திருந்த சான்றோர்கள்
நாமினித்தான் செய்வதென்ன நாதனே யென்றுசொல்லி
கேட்டுநா ராயணரும் கீழ்ச்சுண்டுக் குள்மகிழ்ந்து
நாட்டுக் கரிவிரிநாள் நாரா யணனும்நான்
பட்சி பறவை பலசீவ செந்துக்களை
நிச்சயமாய்ப் படைத்த நீலவண்ண நாதனும்நான்
மண்ணே ழளந்த மாயப் பெருமாள்நான்
விண்ணே ழளந்த விஷ்ணு திருவுளம்நான்
ஏகம் படைத்தவன்நான் எங்கும் நிறைந்தவன்நான்
ஆகப்பொருள் மூன்றும் அடக்கமொன் றானதினால்

நாகக் கடல்துயின்ற நாகமணி நானல்லவோ
சீவசெந்துக் கெல்லாம் சீவனும் நானல்லவோ
பாவம்பிறந்து நீசன் இப்பரந்த உலகத்திலே
இந்நீச னெல்லாம் என்னையறி யாதிருந்தால்
மின்னிலத்தில் நான்படைத்த மிருக மறியாதோ
என்றே யடக்கி ஏகந் தனைநினைத்து
ஒன்றுக்கு மஞ்சாதே உற்றமக்கள் சான்றோரே
பதறாதே யென்றனுடப் பாலகரே யென்றுசொல்லி
இதறாத மாயவனார் இருந்தார்கா ணம்மானை
அப்போ தவரிருக்க அம்மிருக மானதையும்
வைப்போடு நெஞ்ச மாநீச ராசனிடம்
கொண்டுவைத்தா ரந்தக் கோபக்கடு வாய்தனையும்
கண்டு கலிராசன் கனகசந் தோசமுடன்
அன்று சிப்பாயிகட்கு ஆனவரி சைகொடுத்து
இன்றுகடு வாய்தனையும் இப்போது கொண்டுசென்று
கூட்டி லடைத்துவைத்துக் கோப மதுவருத்த
ஈட்டிமை யாயதற்கு இரையொன்றும் போடாமல்
இன்றைக்கு வைத்து இதுநாள் கழிந்ததன்பின்
சென்றந்தப் பேயனிடம் செல்லவிட லாமெனவே
அடைத்துவை போவெனவே அரசன் விடை கொடுக்கத்
திடத்தமுடன் சேவுகர்கள் சென்றடைத்தார் கூடதிலே
அன்றுராஜன் அடுத்தநாள் சென்றதற்குபின்
இன்றுகடு வாய்திறந்து இகழ்ச்சியது பார்பபோமென்று
வந்தானே யந்த மாநீசப் பாதகனும்
தந்தாய்ச் சறடன் சௌனி கௌடனுமே
கவுடன் வெகுடன் கீர்த்திதுரை சானிகளும்
மகுடவர்த்தனர் முதலாய் மந்திரி மார்களுமே
துலுப்பர் சலுப்பருடன் சிப்பாயி மார்களுமாய்
அலுப்பர் பட்டாணிகளும் ஆனகரி காலாளும்
காலாளும் வீராளும் கருமறவர் சேகரமும்
சூலாளும் தோலாளும் சூழ்ந்தபடை யாளர்களும்
ஒக்கத் திரண்டு ஒருமித்தாங் காரமுடன்
மிக்கத் திரண்டு வெடியாயு தத்துடனே
ஆனைக்கா ரர்கோடி திரண்டுவந்தா ரம்மானை
சேனைக்கா ரர்கோடி திரண்டுவந்தா ரம்மானை
இந்தப் படையோடும் எச்சாதி தன்னோடும்
வந்து வளைந்தார் மாகடுவாய்க் கூட்டையுமே
அப்போது ராசன் அருகில்தலை யாடகளை
இப்போது இந்த ஏற்றகாடு வாய்தனையும்
குண்டியிலே கம்புகொண்டு குத்துவது கோபம்வரக்
பண்டுநாமடைத்த பைத்தியக்காரனையும்
இக்கூட்டுக்குள்ளே அய்யாயிருந்தனரே

பண்டுபடைத்த பகவாந்தனையறிந்து
கண்டுகடு வாயதுவும் கம்பதுக் கேபதுங்கி
அதறி மிகமுழங்கி அதுகவிழ்ந்து தான்படுத்துப்
பதறி யதுகிடந்து படுக்கை யிளகாமல்
நீச னவன்குத்த நெடுஞ்சற டன்காமல்
வாசப் பொடிவருத்தி வன்னப் பொடிநிறைத்து
உலயில்மெழுகது போல் உள்ளமிகவுருகி
அலையில் துயில்வோனை அதுவணங்கி நின்றதுவே
விட்டான்கடுவாய்மேல் விதறிஇளகுமென்று
மட்டாய்க் கடுவாய் மாறி யிளகாமல்
கிடந்ததுகா காணையா கிருபை யதினாலே
தடந்தெரியா வண்ணம் சனங்கள் மிகப்பார்க்க
ஈட்டி யெடுத்து இனிக்குத்த வேணுமென்று
மேட்டி யொருவன் விசையாகக் குத்திடவே
எட்டிக் கடுவாய் ஈட்டி தனைப்பிடித்து
விட்டிடவே யருகில் நின்றதொரு வேதியனைக்
குத்திச்சே யீட்டி குடல்பீற அம்மானை
கத்தியும் பட்டுக் கதறியொரு வன்சாகப்
பார்த்திருந்த நீசப் பாதக னேதுரைப்பான்
நாற்றிசைக்கு மேராதே நல்மறையோன் பட்டதுதான்
ஆயிரம் பசுவை அடித்துமிகக் கொன்றாலும்
தோச மீதல்லவொரு வேதியனைக் கொன்றதுதான்
என்னபோ லாச்சு யாம்நினைத்த காரியங்கள்
மன்னன் கலிராசன் மாசறட னுமயர்ந்து
ஞாயமீ தல்லவென்று நடந்தா னரண்மனைக்கு
தோசமொன் றேற்றோமெனச் சொல்லி மிகப்போனான்
அப்போது சனங்கள் அல்லோரு மேதுரைப்பார்
இப்போதிப் பேயனுக்கு இதுவுமொரு நல்லதுதான்
என்றுசொல்லி நீசன் ஏற்ற சறடனுமே
ஒன்றுமுரை யாடாமல் உள்ளபடை யத்தனையும்
கூட்டிக்கொண்டு போனான் கோட்டையதுள் ளம்மானை
வேட்டைப் பலித்துதில்லை வெற்றிதான் பேயனுக்கு
பார்க்கவந் தசனங்கள் பலதிசைக்கு மிவ்விசளம்
ஆர்க்கு மிகவே அறிவித் தகன்றனரே
அப்போ சுவாமி அருகில் மிகவாழும்
மெய்ப்பான சனங்கள் மெத்தசந் தோசமதாய்
இண்ணத் தறுவாய் ஈசுரன் காத்ததுதான்
அண்ணல் காயாம்பு அச்சுதனார் காத்ததுதான்
என்று மனமகிழ்ந்து எம்பெருமாள் நாரணர்க்கு
அன்று விவரம் அறிவித்தா ரன்போர்கள்
கேட்டுநா ராயணரும் கீழ்ச்சுண்டுக் குள்மகிழ்ந்து
ஆட்டுவோ மாட்டுவோங்காண் அல்லாமல் வேறுளதோ

இப்படியே சொல்லி இருக்குமந்த நாளையிலே
முப்படித்தான் ஈசர் மொழிந்தநா ளதுவரைக்கும்
இருப்போ மெனச்சொல்லி இருந்தார்கா ணம்மானை
அருப்பான நீசன் அவன்சிலநாள் சென்றதற்பின்
என்ன விசாரம் இப்பேய னுக்குகெனவே
தன்னே யிருந்து தானினைக்கும் வேளையிலே
முன்னே யொருயுகத்தில் மூவரிய நாரணர்க்கு
அன்னமொடு பாலும் அருந்த மிகக்கொடுத்த
ஆயர் குடியில் அவதரித்தக் கோமானில்
தூய வொருகோனும் துணிந்தங் கெழுந்திருந்து
பத்தியுள்ள நாரணரைப் பாரா வதுஇளக்க
உத்தரித்துக் கோனும் உலகமதை யாளுகின்ற
மன்னவன் முன்பில்வந்து நின்றங்கு ஏதுரைப்பான்
தன்னதிய மானத் தலைவனே கேட்டருளும்
நம்முடைய ராச்சியத்தில் ஞங்ஙளிட தன்னினத்தில்
எம்முடைய ஆளாய் இருக்கின்ற இச்சாணான்
சாணானில் நல்ல தன்மைவெகு மானமுள்ளோன்
கோணா மனதுடையோன் குணமுடைய நல்லவன்காண்
நேர்மை யொழுங்கோன் நேர்சொல் லொருவாக்கன்
ஓர்மை யுடையோன் உபகாரக் காரனிவன்
ஆனதா லெங்களுக்காய் அரசேநீர் தாமுருகி
ஈனமிலா தெமக்காய் இரங்கு மெனத்தொழுதான்

விளக்கம்:

அவ்வாறு நிற்கின்ற போது கலிநீச மன்னன் சறடனை நோக்கி பேயனொரு சாணானை பிடித்துக் கொண்டு வந்து துய்ய இரும்பு விலங்குகளிலே போட்டு வைத்தோம் அல்லவா அந்த சாணானை நாமும் இன்னும் ஒரு சோதனை பார்க்க வேண்டும். அதற்கு ஒரு வேகம் பொருந்திய கடுவாயை அழைத்து வந்து சோதனை செய்ய வேண்டும் என்றான்.

உடனே சறடனாவன் சேவகர்களை அழைத்து நீங்கள் காடுகலைத்து ஒரு வேகம் பொருந்திய கடுவாயைப் பிடித்து வாருங்கள் என்று கட்டளையிட்டான். அவ்வாறு உடனே நீங்கள் பிடித்து வரவில்லை என்றால் உங்களை தூண்டிலிலே போட்டிடுவேன். ஆக்கினைகள் செய்திடுவேன் ஆமிசத்தை வாங்கிடுவேன் என்று சேவுகர்களை இறுக்கமுடனே இறுக்கி அனுப்பி வைத்தான். அப்போது சேவுகர்கள் பனிபிசினும் வெயிலை கண்டு பதறினார் போல பதறி நின்றார்கள் சேவுகர்கள். பதறியே சேவுகர்கள் பண்பாக சட்டை இட்டு நாராயண மூர்த்தியிடம் வந்து அங்கே பணிந்து இருந்தார்கள்.

நாராயணரே நாங்கள் போகும் கருமம் பேராய் நடக்க வேண்டும். பெரிய திருமாலை உம்மை சோதிப்பதற்காக ஒரு கடுவாய் கொண்டு வருவதற்காக செம்மை இல்லாத ராஜா இங்கே எங்களை அனுப்பி இருக்கின்றான். ஆனதனால் கடுவாய் எங்கள் கையெழுதிலே போனவுடன் சிக்கிடவும் வரந்தாரும் புண்ணியரே என்றும் அய்யாவை பணிந்து நின்றார்கள். நாங்கள் கடுவாய் பிடித்து வரவில்லை என்றால் எங்களுடைய குடும்பம் பிழைக்காது எங்களையும் வாழ விடமாட்டார்கள் ஆகவே உம்முடைய அருள் எங்களுக்கு வேண்டுமென்று பணிந்து நின்றார்கள் உடனே நாராயண நன்று நன்று என்று சிரித்து விடைக்கொடுத்தார்.

வைகுண்டரிடம் விடைபெற்று விட்டு சேவகர்கள் காடு கலைத்து கடுவாய் கிடக்கும் கனமலைகள் தான் தேடி வலையை எடுத்துக்கொண்டு வந்தார்கள். வந்தவர்களில் தலைமையானவன் எல்லோரையும் முடுக்கி விட்டு காடுகளை விரைவாக கலையுங்கள் என்று கட்டளை இட்டு கையில் முடிச்சு வலையுடனே கடுநாய்களை ஏவி விட்டு நாட்டைக் கலைத்தார்கள். அப்போது ஒரு வேகம் பொருந்திய கடுவாயானது அவர்கள் கொண்டு சென்றவலைக்குள் வைகுண்டர் தன் செயலால் வந்து சிக்கியது.

உடனே சேவகர்கள் எல்லோரும் ஓடி மிக வந்து வலையை அமர்த்தி மிக போட்டு வைகுண்டருடைய உபாயத்தால் அந்த கூட்டுக்குள் அந்த கடுவாயை அடைத்து தாமரை குளத்து சன்னியாசி பாதமதால் நாமளும் பிழைத்தோம் நம்முடைய உத்தியோகமும் பிழைத்தது. சாமி வல்லவர்தான் என்று மகா தயவு கொண்டாடி நாம் எங்கும் தேடி தெரியாமல் எளிதில் நமக்கு கடுவாய் கிடைத்திட உதவி அந்த சானான் சாமியார்யால் இப்போது நாம் எல்லோரும் பிழைத்து விட்டோம். ஆகவே கடவாய் கொண்டு காலமே போகும் போவோம் என்று சொல்லி கடுவாயை கூண்டிற்குள் அடைத்து கொண்டு இழுத்து வந்தார்கள்.

அப்போது கடுவாய் அலறிய சத்தமானது எல்லோரும் கேட்டு மக்களெல்லாம் பதறினார்கள். நான்கு திசைகளிலும் ஆட்கள் வந்து கணுவாய் கொண்டு வருகின்றபோது மகா கோடியாய் ஜனங்கள் எல்லாரும் சாணான் சாமியை சோதிக்க வேண்டும் என்று கடுவாய் கொண்டு போகிறார்கள் என்று ஜனங்கள் எல்லோரும் வந்து கூடினார்கள். பல சாதியும் கூடி போர்க்கு திரள் போல அங்கே மக்கள் எல்லோரும் ஒன்றாக வந்து கூடினார்கள். இதை கண்டு வைகுண்டர் மனம்மகிழ்ந்து இருந்தார். ஆனால் வைகுண்டரின் அருகில் நின்ற சான்றோர்கள் வேதனை பட்டுக்கொண்டிருந்தார். சான்றோர்கள் நாங்கள் என்ன செய்வதென்று நாதனே என்று கேட்டு நின்றார்கள்.

அப்போது மாயவனார் தன்னுடைய மனதுக்குள் தான் மகிழ்ந்து, அந்த சான்றோர் மக்களிடம், “நாட்டுக்கு அரிவிதி நான் நாராயண நாதன் நான். பட்சி பறவை பல ஜீவச்செந்துகளை நிச்சயமாய் படைத்த நீல வண்ண நாதன் நான். மண்ணேளும் அளந்த மாயப் பெருமாளும் நான் விண்ணேளும் அளந்த விஷ்ணு திருவுளம் நான். “**ஏகம்ப படைத்தவன் நான் எங்கும் நிறைந்தவன் நான் நாங்கள் கடல் துயின்ற நாதமணி நான் அல்லவோ ஆகப் பொருள் மூன்று அடக்கமொன்று ஆனதினால் ஜீவ செந்துக்கெல்லாம் ஜீவனும் நான் அல்லவா**” இந்த கலி நீசன் என்னை அறியாமல் இருக்கலாம் ஆனால் இந் நிலத்தில் நான் படைத்த மிருகம் அறியாதோ என்றே அடக்கி ஏகம் தனை நினைத்து ஒன்றுக்கு அஞ்சாத உத்தமக்கள் சான்றோரே! பதராதே நீங்கள் எந்தனுடைய பாலகரே என்றுச் சொல்லி சான்றோர் மக்களை அமைதிப்படுத்தினார்.

அவ்வாறு சான்றோர் மக்களை அமைதிப்படுத்தி கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில் சேவுகர்கள் கொண்டு வந்த கடுவாயை கலிமன்னனின் முன்பு கொண்டு வந்து நிறுத்தினார்கள். அப்போது அந்த கலிநீசன் கூட்டில் அடைத்திருந்த கடுவாய்க்கு கோபம் வருத்த வேண்டும். அதற்கு இரை ஒன்றும் போடாமல் பட்டினி போடுங்கள் என்று கட்டளையிட்டான். மூன்று நாட்கள் இரைக் கொடுக்க வேண்டாம் அதன் பிற்பாடு அந்த பேயனிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று கலி மன்னன் கட்டளையிட சேவகர்களும் அவ்வாறே இரை ஒன்றும் கொடுக்காமல் அந்த கடுவாயை கொண்டு கூண்டில் அடைத்தார்கள்.

பின்னர் மூன்று நாள் சென்றதன் பின்பு இன்று கடுவாய் வாய் திறந்து சோதனை பார்க்க வேண்டும் என்று மன்னன் சொல்ல அங்கே சறடன், செவுளி, கௌடனுமே, கெவுடன்,

வெகுடன் கீர்த்தி துரைசானிகளும், மகுட வர்த்தனர் முதலாய் மந்திரிமார்களும், சிவாய் மார்களும், அலுப்பர் பட்டானிகளும், ஆனப்பரி காலாட்களும், வீராளும், கரு மறவர், சேகரமும் தோலாலும் சூழ்ந்த படை யாளர்களும் ஒன்றாக திரண்டு ஒருமித்து ஆங்காரமுடன் மிக்க திரண்டு வெடி ஆயுதத்துடன் ஆனைக்காரர் கோடி அம்புக்காரர் கோடி, சேனைகாரர் கோடி திரண்டு வந்தார்கள். இவ்வாறு படையோடு வந்து வளைந்து கடுவாய் உடைய கூட்டை சுற்றி நின்றார்கள். கடுவாய் கூட்டிலே மாயவரை அடைப்பதற்காக தயாரானார்கள்.

அதன் படி கலிநீச மன்னன் மந்திரியை அழைத்து நாம் பிடித்து வந்தோமே அந்த பைத்திய காரனை இப்போது இந்த கடுவாய் கூட்டிற்குள் தள்ளுங்கள் என்று கூறினார். அதன்படி வைகுண்டரை கடுவாயின் கூட்டிற்குள் அடைத்தார்கள். உடனே கடுவாயானது அய்யாவினுடைய பாதம் பணிந்து நின்றது. இதை கண்டு எம்பெருமான் மனதுக்குள் அகமகிழ்ந்து இருந்தார்

ஆனால் கலிமன்னனோ கடுவாய் கடித்து குதறிவிடும் என்றிருந்தோம் ஆனால் இந்த கடுவாய் பதுங்கி இருக்கிறதே ஆகவே இந்த கடுவாய்க்கு கோபம் வரும்படி செய்யுங்கள் என்று கட்டளையிட்டான். உடனே ஒருவன் கையிலே ஈட்டியை எடுத்து வந்து அந்த கடுவாயின் உடைய முதுகு புறத்திலே குத்தினான். கடுவாயானது வலி தாங்க முடியாமல் அங்கே அந்த ஈட்டியை திரும்பி எட்டிப் பிடித்து விட்டு விட்டது. அந்த ஈட்டியானது வேடிக்கை பார்ப்பதற்காக வந்திருந்த ஒரு பிராமணனின் மீது பட்டு அவனுடைய வயிற்றை கிழித்தது. உடனே அவன் அந்த இடத்தில் இறந்து விட்டான். இதை பார்த்த மன்னன் பதறினான். ஒரு பிராமணரை கொன்றால் ஆயிரம் பசுவை கொல்வதற்குரிய பாவம் வந்து விடுமே. ஆகவே இங்கு ஒரு பாவம் நடந்துவிட்டது. அதற்கு நாம் காரணம் ஆகிவிட்டோமே என்றுப் பதறினான்.

இவ்வாறு தான் நினைத்த காரியத்தில் தோல்வியை கண்ட மன்னன் சறடனை அழைத்து என்னவோ ஆச்சு நான் நினைத்த காரியம் தான் என்று சறடனிடம் சொல்லி இருவருமாக மனம் அயர்ந்து நாம் நினைத்த காரியத்தால் இப்படி ஒரு தவறு நேர்ந்து விட்டது. மன்னனும் சறடனும் மனம் வேதனைப்பட்டு அரண்மனைக்கு திரும்பி சென்றார்கள். இப்போது நாம் ஒரு தோசத்தை ஏற்று விட்டோமே என்று மனம் வேதனைப்பட்டார்கள். அப்போது மக்கள் எல்லோரும் அங்கே இந்த பேயனுக்கு ஒரு நல்ல காலம் இருக்கிறது என்று சொல்லி நின்றனர். அப்போது நீச சறடனும் மக்களுடைய முன்னிலையில் ஒன்றும் உரையாடாமல் படைகள் அத்தனையும் கூட்டிக்கொண்டு அரண்மனைக்கு சென்றான். வேட்டை பலித்ததில்லை வெற்றி தான் பேயனுக்கு என்று பார்க்க வந்த ஜனங்கள் எல்லாம் பல திசைக்கும் சென்று இந்த செய்தியை அறிவித்தார்கள்.

அப்போது சுவாமி அருகில் மிக நின்ற சான்றோர் மக்கள் எல்லாம் மகா சந்தோஷமாய் நின்றனர். அந்த நேரம் ஈஸ்வரன் தான் காத்தது, அண்ணல் காயாம்பு அச்சுதனார் தான் காத்தது என்று மனம் மகிழ்ந்து அங்கு இருந்தார்கள். இதைக் கேட்டு நாராயணத்தில் கீழ்சுண்டுக்குள் மகிழ்ந்து ஆட்டுவான் ஆட்டுவான் காண் அல்லாமல் வேறு உளதோ என்றுச் சொல்லி அங்கே அமர்ந்திருந்தார்.

அவ்வாறு அங்கே அய்யா அமர்ந்திருக்கின்ற போது சில சில நாட்கள் கழித்து அங்கு இந்த பேயனை என்ன செய்வது என்று மனதில் நினைத்து தன்னுடைய மந்திரிகள் முன்னிலையில் ஆலோசனை செய்தான். அப்போது முன் யுகத்தில் மூவரிய நாராயணருக்கு அன்னமும் பாலும் அருந்த மிக கொடுத்து ஆயர்க்குடியில் அவதரித்த கோமானில் தூய ஒரு சான்றோன் ஆனவர் துணிந்து மன்னனின் முன்பு எழுந்திருந்து

வைகுண்டருக்காக உலகமது ஆளுகின்ற மன்னவன் முன்பு வந்து நின்று சொல்லுகின்றான்,

தன்னதியமான மன்னர் தலைவனே கேட்டருளும். எப்படி என்றால் அவரை விலங்கில் இட்டு வைத்திருக்கின்றீர்களே இந்த விலங்கில் இருந்து இப்போது இவரை விடுவிக்க வேண்டும். உலகமது ஆளுகின்ற தலைவனே கேட்டருளும் நம்முடைய ராஜ்ஜியத்தில் எங்களுடைய தன்னிடத்தில் எம்முடைய ஆளாய் இருக்கின்ற இந்த சாணான் நல்ல தன்மை உடையவன். கோணாத மனம் உடையவன். குணமுடைய நல்லவன்காண். நேர்மை ஒழுங்கு உடையவன். நேர் சொல் பேசும் நேர்மை குணம் உடையவர். எல்லோருக்கும் உபகாரம் செய்யும் உபகார குணம் உடையவர். ஆகையால் எங்களுக்காக இரங்கி இவரை விடுவிக்க வேண்டும் என்று தொழுது நின்றான்.

## Chapter 4

## வைகுண்டர் விடுதலை

அப்போ தரசன் அவன்மனது தானிளகி
இப்போ திவனை யாமனுப்பி விட்டிடுவோம்
விட்டா லவனும் மேலு மிருக்குமுறை
கட்டாகச் சொல்லிக் கைச்சீட் டெழுதிவைத்துப்
போகச்சொல் லென்று போகண்ட னார்க்குரைக்க
ஆகம் மகிழ்ந்து ஆயன்மறுத் தேதுசொல்வான்
என்ன விதமாய் எழுதிவைக்கும் வாசகங்கள்
மன்னவனே சொல்லுமென மாறி யவன்தொழுதான்

அப்போ தரசன் எல்லோரு மேகேட்க
இப்போ திவனினத்தில் எத்தனைபேர்க் கானாலும்
ஒப்போ டுறவாய் ஒத்திருந்து வாழ்வதல்லால்
சற்பம்போ லொத்த சகலசா திதனக்கும்
உத்தரவு சொல்லாமல் உபாயமாய்த் தானிருந்து
மற்றுமொரு சாதிகளை வாவென்று ரையாமல்
தன்னொரு சாதி தன்னோ டிருப்பதல்லால்
பின்னொரு சாதி பிதனம்வைத்தப் பாராமல்
இனத்துடனே சேர்ந்து இருப்போம் நாமென்றுசொல்லிக்
கனத்தோ டவனும் கைச்சீட் டெழுதிவைத்துப்
பின்னவன் எல்லையிலே போகச்சொல் லென்றுரைத்தான்
மன்னன் கலியுரைத்த வாக்கின் படியெழுதி
ஒப்பமிடச் சொன்னார் உலகளிந்த பெம்மானை
செப்பமுடன் நாரணரும் சிரித்து மனமகிழ்ந்து
நம்மாலே சொல்லி நகட்டப் படாதெனவே
சும்மா அவன்வாயால் சொல்லிச் சுமைசுமந்தான்
இதல்லோ நல்ல இயல்கா ரியமெனவே

அதல்லோ வென்று அரிமா லகமகிழ்ந்து
கைச்சீட்டை சுவாமி கைகொண்டு தான்கீறி
வச்சுக்கோ வென்று மண்ணில் மிகப்போட்டார்
கீறிவிட்ட ஓலைதனைக் கெடுநீசன் தானெடுத்து
மாறிக் கொருத்து வைத்தான்கா ணம்மானை
உன்னில் லிடத்தில் உடனேநீ போவெனவே
குன்னுடைய நீசன் கூறினா னம்மானை
அப்போது மாயவனார் அகட்டென வுறுக்கி
இப்போது நீநினைத்த இலக்கதிலே போவேனோ
தேவ னினைத்தத் தேதியுண் டவ்வேளைப்
போவே னெனச்சொல்லிப் பெரியோ னகமகிழ்ந்து
நல்லவரே மக்காள் நாம்நினைத்தத் தேதியது
வல்லவரே வருகு மாசிபத் தொன்பதிலே
கிழக்குநாம் போவோம் கிரணமாய் நீங்களெல்லாம்
விளக்கொளி போலே வீரம தாயிருங்கோ
என்றுரைக்க நாதன் இசைந்தமக்க ளெல்லோரும்
நன்று நன்றென்று நாதன் பதந்தொழுது
தொழுது அவரிருக்கத் தூயத் திருமாலும்
முழுது மனந்த மூதூரை விட்டுஇன்று
பழுதில்லாத் தெச்சணத்தில் பரமனமக் கேயருளித்
தந்தயச் சிருந்த தாமரையூர் நற்பதியில்
சிந்தை மகிழ்நாதன் சீக்கிரம் போகவென
நினைத்துத் திருமால் நிண்ணயமாய் உள்ளடக்கிக்
கனத்த புகழ்சான்றோர் கைக்குள்ளே நிற்பவரைப்
பய்யவே யின்று பயண மெனவுரைக்க
உய்யமிகக் கொண்டோர் உல்லாச மேயடைந்து
சந்தோசங் கொண்டு சங்கடங்கள் தீர்ந்துதென்று
வந்தோர்க ளெல்லாம் மாயவரைத் தொட்டில்வைத்து
ஏந்தி யெடுத்து இயல்வா கனம்போலே
ஓர்ந்து வருக உற்ற அனந்தம்விட்டுக்
கண்டுநீ சப்பாவிக் கர்த்தாவைத் தானிகழ்ப்பாய்க்
கொண்டுபோஞ் சாணாரைக் கூடிமிகச் சிரிப்பார்
சாமியென்றோன் பட்ட சளங்களெல்லாம் பார்த்திருந்தும்
வாய்மதத்தால் பின்னும் வழுங்கல் சுமப்பதுபார்
ஆலனைச் சுமந்தாலும் அதிகபலன் உண்டாகும்
பிழைப்பில்லை யென்றோ புத்திகெட்டச் சாணார்கள்
உழைக்க மதியற்று உளத்துகிறான் சுமந்து
பேயனைச் சுமந்து புலம்பித் திரிவதற்கு
நாயன் முன்னாளில் நாட்டில் படைத்ததுபார்
என்று தூசணிப்பார் இசைந்தபுகழ்ச் சான்றோரை
அன்றதிலே சிலபேர் அல்லகா ணென்றுசொல்லி

நம்மளுக் கென்ன நட்டம்வந்து போச்சுதெனச்
சும்மா அவனினத்தோர் சுமந்துகொண்டு போவதல்லால்
ஏனிந்தப் பேச்சு யாம்சொல்லப் போறோமெனத்
தானிந்த வார்த்தை சனங்கள்சிலர் சொல்லவே
சொல்லன்பு வன்பு சுவாமி மிகப்பார்த்து
நல்ல அனந்தம்விட்டு நாடும்வால ராமம்விட்டுச்
செல்ல அரியும் சிறப்பா யகமகிழ்ந்து
வல்ல வழியில் வாழுகின்ற ஊரும்விட்டுப்
பள்ளிவா சல்விட்டுப் பார்வதி யகரம்விட்டுப்
துள்ளிக் கோட்டாறு சுசீந்திரத் தலமும்விட்டு
வேக மடக்கி விளியிட்டு வண்டுறுக்கி
ஆகமத்தின் தேதி அடுத்தாலா கட்டெனவே
சொல்லுவேன் வெள்ளித் தோன்றி வருகையிலே
வெல்லுவே னென்று விசையடக்கி எம்பெருமாள்
தொட்டிலி லிருந்து சுவாமி விளியுமிட்டு
மட்டி லிருந்த வளர்தா மரைப்பதியில்
வந்து பதிகண்டு வட்டமிட்டுத் தானாடி
விந்து வழிகளுக்கு மேற்கெதிக ளாகுதென்று
இன்றுமே லெனக்கு ஏற்றவெகு சந்தோசம்
பண்டு எனக்குப் பகர்ந்த மொழிபோலே
சான்றோரை நல்ல தவத்துக் கனுப்பிடவும்
பண்டோர் நமக்குப் பகர்ந்தபடி மாதர்களை
நாடு மணங்கள் நல்லகலி யாணமுதல்
வீடுவகை சொத்து விருதுவே டிக்கையுடன்
தேரு திருநாள் திருக்கல்யாணக் கொலுவும்
பாரு புகழப் பாவாணர் கீதமுடன்
நாட்டில் மனுக்கள் நல்லோர்கள் வாழ்வதிலும்
மேட்டிமைக ளாக மிகுவாழ்வு சேர்கையுடன்
வேண்டும் பவிசு மிகுவாய்ப் பவிசுகளும்
தாண்டும் பெரிய சனங்கள் மிகக்குழைவும்
கொடியுமிகக் கட்டிக் கொக்கரித் திகனையுடன்
வெடியெக் காளமுடன் வெற்றியி டம்மானமிட்டு
நாட்டில் சிறப்பதிகம் நாமினிமேல் செய்யவென்று
தாட்டிமையாய் நாதன் சான்றோர் தமக்குப்போ
அறிவில் வினோதம் அதிகநே ருத்தமமாய்க்
குறியாய் மனதில் குறிக்கும் படியருள
அருளான விஞ்சை அருள்கொடுக்கு மாலோனும்

விளக்கம்:

அப்போது அரசனவன் மனது இளகி இப்போது இவனை இங்கிருந்து அனுப்பி விடுவோம். நாம் அனுப்பிய பிறகு மேலும் இருக்கக்கூடிய முறைகளை கட்டாகச் சொல்லி ஒரு கைச்சீட்டை எழுதி தர வைத்துவிட்டு போக சொல் என்று போகண்டனோடு கூறினான். அப்போது போகண்டனான பூவண்டர் என்னவிதமாய்

வாசகங்கள் எழுதி வைக்க வேண்டும் என்று மன்னவனே சொல்லும் என்று மீண்டும் மன்னனை பணிந்து நின்றார்.

அப்போது மன்னன் இப்போது இவன் இனத்தில் எத்தனை பேர்கள் ஆனாலும் இவனோடு உறவு வைத்து ஒத்து இருந்து வாழலாம். ஆனால் இவன் மற்றொரு சாதியையோ அந்த சாதி மக்களையோ இங்கே வா என்று உரைக்கக்கூடாது. தன்னொரு சாதி தன்னோடு இருப்பதெல்லாம் பின்னொரு சாதி பிதனம் வைத்து பாராமல் இனத்துடன் சேர்ந்து இருப்போம் என்று சொல்லி என்னுடைய இனத்தோடு மட்டுமே நான் இருப்பேன் என்று சொல்லி கைச்சீட்டு எழுதி வைத்துவிட்டு அவனுடைய எல்கைக்கு போக சொல் என்று உரைத்தான் மன்னன்.

கலி மன்னன் சொன்ன செய்தியைக் கேட்டு நாராயணர் சிந்தைக்குள் மகிழ்ந்து நாம் எந்த ஒரு செய்தியையும் நம் வாயால் சொல்லக்கூடாது என்றிருந்தோம். ஆனால் கலி மன்னன் அவனுடைய வாயாலே அவன் சொல்லி விட்டான். ஆகவே இது நமக்கு நல்ல காரியமாகவே அமைந்துவிட்டது என்று மகிழ்ந்து கைச்சீட்டை வாங்கி கைக்கொண்டு தான் கீறி வச்சுக்கோ என்று மண்ணிலே போட்டார். எப்படி என்றால் நான் யாரையும் வா என்று அழைக்க மாட்டேன் என்றும் என்னை நாடி வருகின்ற மக்களை போ என்று சொல்ல மாட்டேன் என்று எழுதி கைச்சீட்டை தரையில் போட்டார்.

காரணம் அந்த கலிநீச மன்னன் சொன்ன அந்த செய்தியை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு அடையாளமாக அவனுடைய கையிலே கொடுக்காமல் அதை எழுதி மண்ணிலே கீழே போட்டார். உடனே மன்னன் அதை மீண்டும் எடுத்து ஓலையை கொருத்து வைத்துக் கொண்டான். இப்போது உன்னிடத்திலே போ என்று விரட்டினான். அப்போது மாயவனார் ஆகட்டும் என உறுக்கி இப்போது நீ உரைத்தவுடன் நான் இங்கு இருந்து செல்ல முடியாது. என்னுடைய தந்தையாகிய நாராயண மூர்த்தி சொன்ன அந்த நேரம் வருகின்ற போது செல்வேன் என்று மறுத்து உரைத்தார்.

மேலும் சான்றோர் மக்களை அழைத்து நாராயண மூர்த்தி சொன்ன அந்த நேரத்திலே நம்முடைய இடம் நோக்கி போகலாம் என்று சொல்லிச் சான்றோர் மக்களிடம் கூறினார். அதன்படி மாசி 19 -ம் தேதி கிழக்கு நோக்கி போவோம் அதற்கு நீங்கள் தயாராக இருங்கள் என்று சான்றோர் மக்களிடம் கூறினார்.

அவ்வாறு சான்றார் மக்களிடம் கூறிய எம்பெருமான் அடுத்ததாக சான்றோர் மக்களுக்கு பலவித புத்திகளை உரைத்தார். எப்படி என்றால் நீங்கள் யாருக்கு அஞ்ச கூடாது. விளக்கின் ஒளி போல வீரத்தனமாக இருக்க வேண்டும். எப்படி விளக்கின் ஒளியானது மேல்நோக்கி சுடர்விட்டு எரிகின்றதோ அதுபோல நீங்களும் உங்களுடைய தூய மனதோடு உள்ளதோடு மேல்நோக்கி எண்ணத்தோடு இறைவனை அடைவதே குறிக்கோளாகக் கொண்டு வாழ வேண்டுமே அன்றி இந்த கலிநீசர்களுக்கு அஞ்சு அடங்கி பதறி இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மக்களுக்கு புத்தி உரைத்தார்.

. சான்றோர் மக்கள் எல்லோரும் அய்யாவின் புத்திமதிகளை ஏற்றுக் கொண்டு இறைவனுடைய பாதாரமே தஞ்சம் என்று சொல்லி மகிழ்ந்து இருந்தனர். அவ்வாறு எல்லோரும் நன்று நன்று என்று பணிந்து நிற்கின்ற போது வைகுண்டர் தனக்கு பணிவிடைகள் செய்து கொண்டிருக்கின்ற சான்றோர் மக்களிடம் வைகுண்டர் உரைக்கின்றார் , நாம் இந்த அனந்தபுர சீமையை விட்டு தெட்சணத்திற்கு எழுந்தருள வேண்டும். அதற்கான நாள் இப்போது நெருங்கிவிட்டது. ஆகவே நாம் அதற்கு தயாராக

வேண்டும் என்று அந்த சான்றார் மக்களிடம் கூற அவர்கள் எல்லோரும் தெட்சணம் ஏக தயாரானார்கள்.

சான்றோர் மக்கள் மகா சந்தோஷத்தோடு நம்முடைய சங்கடங்கள் எல்லாம் தீர்ந்தது என்று மாயவரை தொட்டிலில் வைத்து ஏந்தி எடுத்து அனந்தபுரத்தில் இருந்து தெட்சணம் நோக்கி சுமந்து வந்தார்கள். அப்போது நீச பாவிகள் எல்லாம் இதை பார்த்து ஏளனமாக சிரித்தார்கள். எப்படி என்றால் சாமி என்றவன் பட்ட சளங்கள் எல்லாம் பார்த்து வாய்மதத்தால் பின்னும் இவர்கள் இவனை சுமப்பதை பார். இவர்களுக்கு பிழைப்பு இல்லை என்று புத்தி கெட்ட சாணார்கள் உழைக்க மதி இல்லாமல் இப்போது இந்த சாணான் சாமியை சுமந்து கொண்டு செல்லுகின்றார்கள். பேயனை சுமந்து புலம்பி திரிவதற்கு நாயன் முன்னாளில் இப்படி படைத்தாரோ பார் என்று அங்கே தூஷணித்து இகழ்ந்து சான்றோர் மக்களை நீச குலங்கள் இகழ்ந்து பேசினார்கள்.

உடனே அதிலே சில பேர்கள் நீ எதற்காக இப்படி சொல்லுகின்றாய். நம்மளுக்கு என்ன போய்விட்டது. இதனால் நமக்கு என்ன நஷ்டம் வந்தது? சும்மா அவனுடைய இனத்தார் சுமந்து கொண்டு போகின்றார்கள். ஆனால் நீ எதற்காக இப்படி ஒரு பேச்சை பேசுகின்றாய் எதற்காக இந்த வார்த்தைகளை நாம் சொல்ல வேண்டும் என்று சிலர் நீர்களை கண்டித்தார்கள். அப்போது வைகுண்டர் சொல்லன்பு வம்பு என்ன என்பதையும் நல்லவர்கள் யார் கெட்டவர்கள் என்பதை பார்த்து அனந்தபுர சீமையை விட்டு பால ராமாபுரம் விட்டு தெட்சணம் நோக்கி புறப்பட்டார்கள் . அவ்வாறு வருகின்ற போது சான்றோர் மக்கள் வாழும் இடமும் கண்டு பள்ளி வாசல்கள் விட்டு பார்வதி புர எல்கையை கடந்து கோட்டார் மற்றும் சுசீந்திர தலமும் விட்டு வேகமுடன். ஆகமத்தின் தேதி அடுத்தாகிவிட்டது என்று வெள்ளி தோன்றுகின்ற வேளையிலே எம்பெருமான் விசைடக்கி தெட்சணம் நோக்கி எழுந்தருள தயாரானார்.

அய்யா வைகுண்டர் தெட்சணம் நோக்கி எழுந்தருளுவோம் என்று சான்றோர் மக்களை அழைத்து சொன்னவுடன் சான்றோர் மக்கள் அய்யாவை தொட்டில் மேல் அமர்த்தி அவர்கள் தங்களுடைய தோழிலே சுமந்து கொண்டு வந்தார்கள்.

வளர்தாமரை பதியில் வந்து வட்டமிட்டு ஆடி விந்துவழி குலங்கள் மேற் குலங்கள் ஆக வேண்டும் என்றும், இனிமேல் தமக்கு ஏக வியாழன் வருகிறது என்றும், முன்பு நாராயணமூர்த்தி பகர்ந்த மொழியின் படி சான்றோர் மக்களை நல்ல தவத்திற்கு அனுப்பிடவும் சப்த மாதர்களை மணங்கள் செய்து கல்யாணக்காட்சி சிறப்புடனே வீடு வகைச் சொத்து விருது வேடிக்கையுடன், தேரு திருநாள் திருக்கல்யாண கொலுவுடனே இந்த உலகம் புகழும் படியாக பாவாணர் கீதமுறைப் பாடி நிற்க, நாட்டில் உள்ள மக்கள் நல்லோர்கள் வாழ்வதிலும் மேட்டிமையான மிகு வாழ்வு சேர்க்கையுடன், வேண்டும் பவுசு மிகவான பவுசுகளும் தாண்டும் பெரிய ஜனங்களான சான்றோர் மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்றும், கொடியும் மிகக்கட்டி கொக்கரித்து இகனையுடன் எக்காளமுடன் வெற்றி டம்மானமிட்டு நாட்டில் சிறப்பு அதிகம் நாம் இனிமேல் செய்ய வேண்டும் என்று வைகுண்டர் மனதில் எண்ணினார்.

மேலும் மக்களுக்கு அறிவில் வினோதம் தோன்றுகிறமாக விதமாகவும், குறியாய் மனதில் குறிக்கும் படி அருள் கொடுக்க வேண்டும் வேண்டும் என்றும், சான்றோர் மக்களுடைய மனதை பக்குவப்படுத்தும் விதமாகவும் அய்யா அருளிய ஞானம் மனதில் தோன்றும் விதமாகவும் செய்வதற்காக சான்றோர் மக்களை அழைத்து துவையல் தவம் செய்ய கூறினார்.

## Chapter 5

## துவையல் தவம்

வாகைப்பதி முட்டப்பதி தவசு

மருளாமல் சாணார் மனதி லுருவாக
மூணுநேரத் துவைத்து உச்சி யொருநேரமதாய்
வேணும் பச்சரிசி வெற்றிச் சிறுமணியும்
வேகவைத்து நன்றாய் விரைவாய் மணலிலிட்டுத்
தாக மில்லாமல் தவசிருக்க வேணுமென்று
பெண்ணுடனே ஆணும் பிறந்தபிள்ளை தன்னோடும்
கண்ணான கட்டில் கலருங் கிழவிவரை
சூலி யிளம்பிள்ளை திரண்ட மடமாதும்
மாலி னருளால் வஸ்துவகை தான்மறந்து
வீடு மனைமறந்து விற்று விலைகள்செய்து
ஆடுமாடுகளையும் ஆனமிருகங்களையும்
ஒண்ணிலரைப் பாதியென ஒக்கவிற்றார் சொத்ததனை
மண்ணு மறந்து மாடாடு தான்மறந்து
ஆண்டபண்ட மெல்லாம் அகல மிகமறந்து
கூண்டபண்ட மெல்லாம் கூசாம லேமறந்து
அனுபோக மற்று ஆண்பெண் ணிகழாமல்
இனிபோக மற்று இருந்தார் தவசெனவே
எல்லோரு மிக்க இருக்கத் தலம்பார்த்து
அல்லோரு மேக அவர்கள் மனதிலுற்று
நாத னரிநாதன் நாரா யணநாதன்
சீதக்குரு நாதனிடம் சென்றா ரவர்பதத்தல்
சென்றே யவருடைய சீர்பாதந் தெண்டனிட்டு
இன்றேக எங்களுக்கு இப்போ விடையருள்வீர்
என்றே சனங்கள் எல்லோரும் போற்றிநிற்க
அன்று பெருமாள் அகமகிழ்ந்து கொண்டாடி

நாம்நினைத் ததுபோலே நடந்து காரியந்தான்
தாம்நினைத் ததுபோலே தாநடந்து வீரெனவே
உத்தரவு சொல்ல உடைய வழிச்சான்றோர்
சித்தருட அருளால் சென்றார் தவமதுக்கே

விருத்தம்

தவமது செய்ய வென்று சடுதியிற் சான்றோ ரெல்லாம்
உகமது அளந்தோன் பாதம் உண்டென மனதி லாக்கி
வகைபொரு ளாசை யற்று மனைவிகள் மக்கள் கூட
திகையது நோக்கி வாரி துவரயம் பதியிற் சேர்ந்தார்

விருத்தம்

மண்ணுடன் மனைக ளாசை மாடுடன் வீடு மாசை

பெண்ணுடன் பொருளி னாசை பூதலப் பொன்னி னாசை
எண்ணுடன் எழுத்தி னாசை இடறுபொல் லாசை வேசை
ஒண்ணுடன் ஆசை நீக்கி உடையவ னாசை கொண்டார்

விருத்தம்

கொண்டுநல் மனதிற் பூண்டு குருபரா தஞ்ச மென்று
பண்டுநல் துவார கையின் பதிவாட வாசல் தன்னில்
தெண்டிரை வாவை சூழ்ந்த செகற்கரை தனிலே வந்து
கண்டுநற் பதியில் புக்கி கருத்துடன் இருந்தா ரன்றே

விருத்தம்

இருந்தவர் தலமும் பார்த்து ஏகநல் வெளியுங் கண்டு
பொருந்திடும் ஞான வான்கள் புண்ணிய மனதி லெண்ணி
வருந்திடக் கனிவே காணும் வாவைநற் பதியி தாகும்
தெரிந்திடக் கடலில் மூழ்கிச் சிவகலை யணிந்தார் தாமே

விருத்தம்

அணிந்தவர் பெண்ணு மாணும் அன்புடன் மகிழ்ச்சை கூர்ந்து
துணிந்தவர் தங்கள் தங்கள் துயரங்க ளறவே நீக்கப்
பணிந்தவர் நாதன் தன்னைப் பரிவுடன் மனதுள் ளாக்கித்
தணிந்தவர் கோப வேகத் தகுளியைத் தள்ளி வாழ்ந்தார்

விளக்கம்:

துவையல் தவம் செய்வதற்காக அதற்குரிய வழிமுறைகளையும் கூறினார். எப்படி என்றால் மூன்று நேரம் துவைத்து உச்சி ஒரு நேரமதாய் பச்சரிசியில் வெற்றி சிறுமணியுடன் வேக வைத்து நன்றாக மணலில் இட்டு அதை உண்டு தவம் இருக்க வேண்டும் என்று கூறினார். உடனே சான்றோர் மக்கள் ஆண் பெண்ணுடனும் பிறந்த பிள்ளை தன்னோடும், கட்டிலில் படித்து எழும்ப முடியாத நிலையில் இருக்கும் வயதானவர்கள் வரை சூலியாகிய கர்ப்பிணி பெண்ணும், இளம் பிள்ளைகளும், திரண்ட மடமாதான வாலிப பருவத்தை அடைகின்ற நிலையில் இருக்கும் பெண்களும் இறைவனுடைய அருளால் தவத்திற்கு தயாரானார்கள். மேலும் வஸ்து வகையும் தாங்கள் வாழ்ந்த வீடு வகை இவற்றை மறந்து வித்து விலைகள் செய்து ஒன்னில் அரை பாதி என தங்களுடைய சொத்துக்களை எல்லாம் விற்று மண்ணை மறந்து மாடாடு தான் மறந்து ஆண்ட பண்டமெல்லாம் மறந்து கூண்ட பண்டம் எல்லாம் கூசாமலே மறந்து அனுபோகம் மற்று ஆண் பெண் இழகாமல் இனி போகமெல்லாம் அத்து தவசிற்க்கு தயாரானார்கள்.

உடனே நாதன் அரிநாதன் நாராயணர் சீதகுருநாதனிடம் சென்று அய்யாவே நீங்களே தஞ்சம் என்றும் நாங்கள் இப்போது தவத்திற்கு தயாராக இருக்கிறோம் என்று எல்லோரும் அகமகிழ்ந்து வைகுண்டரிடம் சொல்ல அவரும் தான் நினைத்தது போல் தாங்களும் நடத்துங்கள் என்றுக் கூறினார். உடனே சான்றோர் மக்கள் இப்போது உங்களுடைய உத்தரவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம் என்று அய்யாவிடம் விடை வேண்டி நின்றார்கள். அதன்படி அய்யாவும் விடை கொடுக்க சான்றோர் மக்கள் எல்லோரும் தவம் செய்வதற்கு தயாரானார்கள்.

தவம் செய்ய வேண்டும் என்று சான்றோர் மக்கள் எல்லாம் உலகம் அளந்தவன் பாதாரமாகிய இறைவனை மனதில் எண்ணி உலகப் பொருட்களின் ஆசையெல்லாம் நீக்கி மனைவிகள் மக்கள் எல்லோரும் சேர்ந்து தவம் இருப்பதற்காக வாரிக் கரையில் வந்து சேர்ந்தனர்.

தவம் செய்வதற்காக வந்த சான்றோர் மக்கள் இந்த உலக சொத்து ஆசையை மறந்து, தாங்கள் இருக்கின்ற இல்லத்தினுடைய ஆசை மற்றும் மனைவியினுடைய ஆசை எல்லாம் விட்டு, தாங்கள் வளர்த்து வந்த ஆடு மாடுகளை எல்லாம் விட்டு, பாதுகாத்து வந்த உறவு முறைகளினுடைய ஆசைகளையும் விட்டு இந்த உலக வாழ்வாதாரத்திற்கு காரணமான பொன் பொருளை ஆசை எல்லாம் விலக்கி பணம் பதவி பட்டம் எல்லாவற்றினுடைய ஆசையையும் விலக்கி உடையவன் ஆசையாகிய இறைவனே தஞ்சம் என்று எல்லாவற்றையும் விலைக்கி தவம் செய்வதற்கு தயாரானார்கள்.

இறைவனே தஞ்சம் என்று இறைவனை மனதில் நினைத்துக் கொண்டு குருபரா தஞ்சம் என்று கிருஷ்ண அவதாரத்தின் போது இறைவன் ஆண்ட தலமானது கடலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த துவாரகையின் வட வாசலுக்கு நேராக அமைந்துள்ள பதியின் சிறப்பையும் கண்டு கடற்கரையில் வந்து கருத்துடன் தவம் செய்ய தயாரானார்கள்.

தவம் இருப்பதற்காக கடற்கரையில் வந்தவர்கள் இருப்பதற்குரிய இடத்தின் சிறப்பை எல்லாம் பார்த்து, இறைவனை அடைவதற்கு ஏற்ற வழி எந்த இடம் என்று மனதில் எண்ணி அதன்படி வாகை நற்பதியில் நாம் தவம் இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று அறிந்து அந்த துவாரகையின் வடவாசலுக்கு நேராக இருக்கும் வாகைப் நற்பதியில் வந்து கடலில் பதம் விட்டு (கடல் நீராடி) எல்லோரும் தவம் இருப்பதற்குரிய சிவ கலை என்று சொல்லக்கூடிய காவியுடை அணிந்து தவம் செய்வதற்கு தயாரானார்கள். காவி உடை என்பது பற்றற்ற நிலையில் எல்லாவற்றையும் துறந்தவர்கள் அணிகின்ற ஆடை என்பதை இங்கு அய்யா வைகுண்டர் தெளிவுப் படுத்து கின்றார்.

சிவகலை என்று சொல்லக்கூடிய காவியுடையை அணிந்த உடனே ஆணும் பெண்ணும் தங்களுடைய மனதில் அன்புடன் மகிழ்ச்சியை கூர்ந்து தங்கள் தங்கள் துயரங்களை எல்லாம் அறவே நீக்கி இறைவனை பணிந்து தங்களிடம் மனதில் இறைவனுடைய எண்ணத்தை தவிர வேறு எந்த எண்ணமும் இல்லாமல் கோபதாபங்கள் போன்ற அகப்பகங்களை உருவாக்கக்கூடிய அந்த கலிமாய எண்ணங்களை எல்லாம் விட்டு இறைவனே தஞ்சம் என்று ஒரே நினைவோடு தவத்தை தொடங்கினார்கள்.

நடை

வாழ்ந்தே தவசு வாகைப் பதியதிலே
தாழ்ந்தே சனங்கள் சந்தோச மாயிருக்க
அந்திசந்தி யுச்சி ஆகமூ ணுநேரம்
நந்தி யருளால் நல்ல துணிதுவைத்து
உவரிநீ ரில்துவைத்து உவரிநீ ரைக்குடித்து
உவரிநீர் தன்னில் உற்றன்ன மேசமைத்து

உச்சி யொருநேரம் உணவு மிகஅருந்தி
மெச்சிப் புகழ்ந்த விடிய வொருசாமம்
உகப்பாட்டு மோதி உற்ற அபயமிட்டு

வகையாய் விடிய வரும்நா ழிகையேழில்
துணிகள் துவைத்துத் தோய மதிலிறங்கிக்
கெணியாய்க் குளித்துக் கிருஷ்ணர் பதம்போற்றி
இப்படியே நித்தம் இவர்மறவா வண்ணமேதான்
அப்படியே வாரி அலைவாய்க் கரையிருக்க
வாரிப் புறமாய் வளர்காற்று வாடைமிக
நீரிறைத்தாற் போலே நித்தமந் தத்தவத்தோர்
பேரி லிறைத்துப் பெருவாடை யாய்வீசச்
சீருகந்த நாதன் செயலா மெனஇருந்தார்
இருந்தார் தவசு ஏற்றரிய சான்றோர்கள்
அருந்தாமல் மற்றொன்றும் அன்னமொரு நேரமுமாய்
வாரிநீ ரல்லால் மறுநீ ரறியாமல்
சீரியல்பாய்ச் சான்றோர் செய்தார் தவமதுவே
தவமாய்யிவர்கள் தானிருக்கும் அப்பொழுது
பவமா னதுநீக்கும் பச்சைநா ராயணரும்
முன்னாறு வருசம் உவந்திருந்த நற்றவத்தைப்
பின்னொரு வருசம் பேணி நடத்துமுன்னே
நீச னிடையில் நிறடுசெய் தானதினால்
தோச மவன்பேரில் சுமக்கச்சா பம்புரிந்து
ஆறு வருசம் அதிற்குறைவு வராமல்
வாறு தவசு வகுத்து முடிக்கவென்று
புரிந்தார் தவசு இலக்குத் திகைவதுமுன்
இருந்தார்தவசு லெக்குத்திகைவதுமுன்
சான்றோர் தவத்தைத் தான்பார்க்க வேணுமென்று
ஆன்றோர் மனதில் அன்புமிகக் கொண்டாடி
அலைவாய்க் கரையில் அமர்ந்திருந்த சான்றோரை
நிலைபார்க்க வேணுமென்று நிச்சயித் தெம்பெருமாள்

உகத்துக்குத் தக்க உபாயமினிச் செய்யவென்று
மகத்துவ நாதன் மனதில்மிக வுத்தரித்துத்
தெள்ளு தனக்குச் சிணமே விடைகொடுத்தார்
விள்ளுறவே செய்து விடுநீ சிணமெனவே
ஆதி விடையருள அதுவெல்லா மேசமைந்து
மோதி யொருமித்து உற்றஅந்தத் தெள்ளினங்கள்
வந்து வளைந்துதல்லோ வாய்த்ததவத் தோரருகில்
பொந்து பொந்துள்ளும் போடுந் துணியதுள்ளும்
வைத்தக் குடிலுள்ளும் வளைந்ததுகாண் தெள்ளினங்கள்
மெய்த்தபுகழ்ச் சான்றோர் மெலிவாய் மிகச்சடைத்து
மாடா டுகோழி வளர்ப்பில்லா நம்மிடத்தில்
ஏடா விடமல்லோ இதுசெய்யு மாய்மாலம்
இருக்கு மிடத்தில் எண்ணக்கூ டாதபடிப்
பொருக்குப் பொருக்கெனவே பொன்றக் கடிக்குதென்ன

மூணுநேரந் துவைக்கும் உற்றகலை யானதிலே
கோணியலில் பற்றும் குறுந்தெள்ளு வந்ததென்ன
படுக்க இருக்கப் பண்புசற்று மில்லாமல்
முடுக்கமாய்த் தெள்ளு முடுக்கிமுடுக்கிக் கடிக்க
இதல்லால் சான்றோர்க்கு இன்னம்விட்டுப் பார்ப்போமென
சதமில்லா மூட்டை தன்னினங்க ளைவருத்தித்
தவத்தைக் குலைத்துச் சான்றோரைத் தான்விரட்டிப்
பவத்துமாய் நீங்கள் பாவிப்பீ ரென்றுசொல்லி
மூட்டைக் குரைகள் மொழிந்தார் முகுந்தனுமே
சேட்டைசெய் வோமெனவே திரண்டு மிகச்சூழ்ந்து
வந்து வளைந்தார் வாழரியச் சான்றோரை
முந்து பரிந்த மூண்டதெள் ளினங்ளோடு
கூடிக் குலாவிக் கூட்டமிட் டேதிரளாய்த்
தேடிச் சான்றோரைச் செகலதுக்குள் ளேவிரட்ட
வேணு மெனவே விசும்புகொண் டவ்வினங்கள்
பூணு முடைமை போர்த்துந்துணி யிலிருந்து

வாணுவமாய் ரொம்ப வந்து வளைந்துமிக
காணுதற்கு மெத்த கடுங்கோபமாய் எழுந்து
நடையிற் கடிக்கும் கிடக்கவிடா தேயரிக்கும்
குடிக்கின்ற வெள்ளமதில் கும்பல்கும்ப லாய்க்கிடக்கும்
முடிக்குந் தலையில் முச்சிறங்கை போல்கிடக்கும்
அன்னத்தி லேமிதக்கும் அண்டைக்கல்லி லேவாழும்
முன்னெற்றி மயிரில் மிதந்துமிக முன்னுதிரும்
இடைக்குள் ளிருந்து இடைவிடா தேயரிக்கும்
உடையி லிருந்து ஓயாம லேயரிக்கும்
மேலெல்லா மிதந்து மிகச்சரியும் கீழ்வழியாய்க்
காலெல்லாந் தெள்ளு கனமாய் மிகஅரிக்கும்
மாறி யிவரெடுக்க மனதுசற்று மில்லாமல்
ஆறிப் பதறி அசையாமல் தாமிருப்பார்
வாரிக் கரையில் வளர்நண்டு சேகரமாய்
மாரித் துளிபோல் வந்து வளைந்துமிகப்
பாண்டத்துக் குள்ளே பதிந்திருந் தேவாழும்
காண்டமாய்க் கண்டு கைநீட்ட லாகாதெனத்
தடவி யெடுத்துத் தன்னாலே போநீயென
வடவிப் போகாமல் வளர்ப்பார்கள் போலிருப்பார்
இப்படியே தெள்ளு ஈமூட்டை நண்டினங்கள்
அப்படியே கூடி அவரலைச்சல் செய்திடவே
அல்லாமல் சான்றோர் அவரவர்க்குத் தேகமதில்
பொல்லாத வங்குப் பெரிய சிரங்குடனே
வெகுவாய்ப் பெருத்து மேலிலிடை காணாமல்
தகுவாய்ச் சடைத்துச் சனங்கள்மிக எல்லோரும்

எங்கே யினிப்போவோம் எல்லோரு மென்றுசொல்லி
சங்கை யுடன்கூடிச் சமுத்திரக் கரையருகில்
போயிருக்கும் வேளை பொங்குகடல் கோபமதாய்
வாயிதமாய்த் திரைதான் வந்துகோபித் தடித்து
பாலதியப் பெண்கள் பண்பா யுடுத்திருந்த

சீலைரண்டு தன்னைச் செகற்கொண்டு போயினதே
அய்யோ கடல்தான் அங்குசெல்லக் கூடுதில்லை
செய்ய விலகவென்றால் தெள்ளுநம்மை விட்டுதில்லை
வீட்டுக்குள் செல்ல விட்டுதில்லை மூட்டையது
ஊட்டுகின்ற அன்னமதில் உயரவந்து நண்டிருக்கும்
தேகமதிற் சிரங்கு சொறிச்சல் பொறுக்குதில்லை
வேகமுடன் காந்தல் மேலில் பொறுக்குதில்லை
தாகத்துக் கேற்ற தண்ணீர் கிடைக்குதில்லை
பாகமுட னுண்ணப் பற்றுதில்லை தீனதுவும்
இனியெங்கே போவோம் எல்லோரு மென்றுசொல்லி
மனுப்புகழுஞ் சான்றோர் மாதமொரு ஆறாய்
இருந்தா ரதிலே ஈசன் செயலெனவே
திருந்தார மார்பன் திரும்ப வொருதலத்தில்
கொண்டுபோய்ப் பார்ப்போம் குலதெய்வச் சான்றோரை
பண்டு வொருசணான் படுத்திருக்கு மவ்வேளை
சொர்ப்பனம்போல் உற்பனமாய் சுவாமி மிகவுரைத்தார்

விளக்கம்:

மேலும் வாகை நற்பதியில் வந்து எவ்வாறு சான்றோர் மக்கள் தவத்தை தொடங்கினார்கள் என்பதையும் அய்யா கூறி வருகின்றார். எவ்வாறு என்றால் அந்தி சந்தி உச்சி என்று மூன்று வேளையும் கடல் நீரில் பதம் விட்டு இறைவனை மனதில் ஏற்று அந்த கடல் நீரில் துணி துவைத்து கடல் நீரை தான் குடித்து அந்த கடல் நீரிலே பால் அன்னம் சமைத்து மதியம் ஒரு நேரம் மட்டும் அன்னம் மிக அருந்தி எப்போதும் இறைவனுடைய நாமமாகிய அய்யா சிவ சிவ அரகரா என்ற மந்திரத்தை ஓதி தவம் இருந்தார்கள். மேலும் தவம் இருக்கும் போது காலை மாலை உகப்பாட்டு ஓதியும் , மதியம் உச்சிப் பாட்டு ஓதியும் வழிபாட்டு முறையை தவறாது செய்து வந்தனர்.

சான்றோர் மக்கள் மூன்று நேரமும் கடலில் இறங்கி பதம் விட்டு கிருஷ்ணருடைய பாதரமாகிய இறைவனை பணிந்து தவத்தை மேற்கொண்டார்கள். அவ்வாறு தவம் மேற்கொள்ளுகின்ற போது கடற்கரையை அருகிலே இருந்து தவத்தை மேற்கொண்ட காரணத்தினால் கடல் காற்றானது அதிகமாக வீசி குளிரை உருவாக்கியது. ஆனால் தவம் செய்து கொண்டிருந்த சான்றோர் மக்கள் கடல் காற்றின் தன்மையையோ கடல் அலையின் பேரிரச்சலையோ பொருட்படுத்தாமல் இறைவனே தஞ்சம் என்று தவத்தை மேற்கொண்டனர்.

சான்றோர்கள் தவம் இருக்குகின்ற போது கடல் நீரை தவிர வேறு நன்னீர் அருந்தாமல் மதியம் ஒரு நேரம் மட்டும் பால் அன்னத்தை உண்டு கடுமையான தவத்தை மேற்கொண்டார்கள். அது மட்டுமல்ல அன்னத்தை உண்ணுகின்ற போது தரையிலே கடல் மண்ணிலே போட்டு கையை பின்னால் கட்டிக்கொண்டு வாயால் அன்னத்தை உண்ண வேண்டும் அப்படி பண்ணுகின்ற போது நண்டினங்கள் எல்லாம் அந்த அன்னத்தின் மீது மண்ணை வாரி இறைக்கும். ஆனால் அதையும் பொருள் படுத்தாமல்

நண்டினங்களுக்கு எந்தவித தொல்லையும் கொடுக்காமல் தங்களுடைய தவத்தை மேற்கொண்டார்கள்.

இவ்வாறு சான்றோர் மக்கள் தவம் செய்து கொண்டிருக்கின்ற போது வைகுண்டர் தான் மேற்கொண்டு வந்த ஆறாண்டு கால தவத்தை இதுவரையிலும் நிறைவேற்றவில்லை அந்த தவத்தை நிறைவேற்ற வேண்டும் என்று மனதில் எண்ணினார். அய்யா தவம் செய்து கொண்டிருந்த போது நீசன் செய்த இடறினால் மீண்டும் ஒரு ஆண்டு காலம் தவம் மீதம் இருக்கின்றது. இந்த தவத்தை குறைவு வராமல் நிறைவேற்ற வேண்டும் என்றும், அதற்கு முன்பாக சான்றோர் மக்களுடைய தவத்தை பார்க்க வேண்டும் என்று எண்ணி அலை வாய் கரையில் அமர்ந்திருந்த சான்றோரின் நிலை பார்க்க வேண்டும் என்று ஒரு உபாயத்தை கையாண்டார்.

எப்படி என்றால் தெள்ளினங்களை ஏவி விட்டு சான்றோர் மக்களுக்கு துன்பம் கொடுக்குமாறு செய்தார். உடனே அந்த தெள்ளினங்கள் எல்லாம் அந்த சான்றோர் மக்களை வந்து வளைந்து கொண்டது. அது மட்டுமல்ல பொந்து பொந்தாய் அவர்கள் போடுகின்ற துணி அதிலும் அவர்கள் வைத்திருந்த குடிலதுக்குள்ளும் சான்றோர்கள் பயன்படுத்துகின்ற பொருட்களின் மீதும் இருந்து தெள்ளினங்கள் அவர்களுக்கு பலவிதத் துன்பங்கள் கொடுத்தது.

இதனால் சான்றோர் மக்கள் மிகவும் சோர்வடைந்து நாம் ஆடு மாடு கூட வளர்க்கவில்லையே. அப்படி இருந்தால் கூட இந்த தெள்ளினங்கள் நம்மை கடிக்கிறது என்றால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நாமோ மூன்று நேரம் துவைத்து ஆடைகளையும் நாம் இருக்கும் இடத்தையும் தூய்மையாக வைத்திருக்கின்றோமே. அப்படி இருக்கின்ற போது இந்த தெள்ளினங்கள் நம்மை இவ்வாறு கடித்து துன்பப்படுத்துகின்றதே நாம் என்ன செய்வது. நாம் எங்கு சென்று இருந்தாலும் இருக்கும் இடத்தில் எண்ண கூடாதபடி பொருக்குப் பொருக்கெனவே ஓரிடத்தில் இருக்க விடாதபடி இந்த தெள்ளினங்கள் கடித்து துன்பப்படுத்துகின்றனவே. ஆடைக்கு உள்ளும் இடுப்பிலும் இருந்து கொண்டு படுக்கவோ இருக்கவோ முடியாத வண்ணம் தெள்ளினங்கள் கடித்து துன்பம் செய்கிறது என்று இதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் அவர்கள் மனம் வேதனைப்பட்டு துன்பப்பட்டு சோர்ந்து இருந்தார்கள்.

அவ்வாறு அவர்கள் செய்கின்ற அந்த தவத்தை கலைக்கின்ற வண்ணமாக தெள்ளினங்களால் பல சோதனைகளை ஏவிவிட்டார். ஆனாலும் அவர்கள் உகப்பாட்டு ஓதுவதையோ இறை நாமத்தை கூறுவதையோ மூன்று நேரம் துவைத்து அந்த தவத்தை மேற்கொள்வதையோ எந்த இடையூறும் வராமல் செய்து வந்தார்கள். இவ்வாறு தெள்ளினங்களால் வருகின்ற தொல்லைகளை எல்லாம் இவர்கள் சகித்துக் கொண்டார்கள் என்று எண்ணி அடுத்ததாக மூட்டை பூச்சிகளை ஏவி விட்டார்.

தெள்ளினங்களை ஏவி விட்டு சோதனை செய்த பிற்பாடு எம்பெருமான் அடுத்ததாக மூட்டை பூச்சிகளை ஏவி விடுகின்றார். சான்றோர் மக்களினுடைய தவத்தின் உறுதியை சோதிப்பதற்காக அந்த மூட்டை பூச்சிகளை ஏவி விட்டு சான்றோர்களை சோதிக்க வேண்டும் என்று சொல்ல அதன்படி அந்த மூட்டை பூச்சிகள் எல்லாம் சேட்டை செய்வோம் என்று திரண்டு மிகச் சூழ்ந்து சான்றோர் மக்களை வளைந்து கொண்டது. இவ்வாறு கூடி குலாவி கூட்டமிட்டு திரளாக சான்றோர்கள் இருக்கின்ற அந்த இடத்திலே சென்று மூட்டை பூச்சிகள் தொல்லை கொடுத்தன.

சான்றோரை கடலுக்குள் விரட்டி விரட்டி விட வேண்டும் என்று பலவாறு தொல்லை கொடுத்தன. மேலும் அவர்கள் அணிகின்ற ஆடைகளிலும், போர்த்துகின்ற

துணிகளிலும் இருந்து அவர்களை தொல்லை கொடுத்தன. நடையில் கடிக்கும் நல்ல இடுப்பிலே கிடைக்கும் கடையிலிருந்து கிடைக்கும் கீழே படுக்க விடாமல் கடிக்கும். குடிக்கின்ற தண்ணீர் அதிலும் கும்பல் கும்பலாய் கிடக்கும். கையால் கடல் நீரை எடுத்து அருந்தலாம் என்று கடலுக்குள் சென்றால் கூட அந்த கடல் நீரிலே அந்த மூட்டை பூச்சிகள் மிதந்து கொண்டிருக்கும்.

தலைமுடியை வாரி முடிக்கலாம் என்றால் அந்த தலை முடிக்குள் முச்சிறங்கைப் போல் கடித்துக் கொண்டிருக்கும். மேலும் சமைத்து வைத்து இருக்கும் அன்னம் அதிலும், அவர்கள் அருந்துகின்ற அன்னத்திலும் மிதந்து கொண்டிருக்கும் இருக்கும். உணவு சமைக்கின்ற அண்டை கல்லிலே . முன்னெத்தி மயிரில் மிதந்து கொண்டு அங்கே ஊர்ந்து . இடையில் இருந்து இடைவிடாதே கடித்துக் கொண்டிருக்கும். உடையிலிருந்து ஓயாமலே அரித்து கொண்டிருக்கும். மேலெல்லாம் இருந்து மேலும் கீழுமாக அங்கு ஊர்ந்து சென்று . காலெல்லாம் தெள்ளு கனமாய் மிக அரிக்கும். இவ்வாறு அந்தக் தெள்ளினங்களும் மூட்டை இனங்களும் சான்றோர் மக்களுக்கு பலவித தொல்லைகளை கொடுத்துக் கொண்டிருந்தது. ஆனால் சான்றோர் மக்கள் அவைகளை எடுத்து கீழே விட்டனர்.

இவ்வாறு மூட்டைப்பூச்சிகளும் தெள்ளினங்களும் சான்றார் மக்களுக்கு எவ்வளவு துன்பங்களை கொடுத்தபோதிலும் சான்றோர் மக்கள் அந்த மூட்டை பூச்சிகளுக்கும் தெள்ளி இனங்களுக்கும் எந்த வித தொல்லையும் கொடுக்காமல் அவற்றை கையால் எடுத்து கீழே விட்டனர். மேலும் சில நேரங்களில் அவற்றை எடுத்து விடுவதற்கு கூட மனம் இல்லாமல் அப்படியே அசையாமல் இருந்தனர். அவ்வாறு இருக்கின்ற அந்த நேரத்திலே வாரிக் கரையில் அமர்ந்திருக்கின்ற போது நண்டினங்கள் வந்து மேலும் சான்றோர் மக்களுக்கு துன்பம் கொடுத்தன.

மாரி துளிர் போல் வந்து வளைந்து அவர்கள் பயன்படுத்துகின்ற பாத்திரங்களுக்குள்ளேயே பதுங்கி இருந்து வாழும். மேலும் அவர்கள் இருக்கின்ற இடங்களில் வந்து அவர்களுக்கு தொல்லை கொடுத்து இருந்தது. ஆனால் அவர்கள் இதற்கு எந்தவித துன்பமும் கொடுக்கக்கூடாது என்று எண்ணிய சான்றோர் மக்கள் அவர்கள் தடவி எடுத்து தன்னாலே நீ போ என்று அங்கே அந்த உயிரினங்களை வளர்ப்பவர்கள் போல பேணி பாதுகாத்து அவற்றை கீழே எடுத்து விட்டனர். இப்படி தெள்ளினங்களும் மூட்டை பூச்சிகளும் சான்றோர் மக்களுக்கு பலவிதவாறு அலைச்சல் செய்த போதிலும் அவர்கள் எள்ளளவு கூட அவற்றிற்கு எதிர்வினை ஆற்றாமல் இறைவனே தஞ்சம் என்று இறை நாமத்தை ஓதுவதில் இருந்தோ உகப்பாட்டு படிப்பதில் இருந்தோ மூன்று வேளை துதிப்பதில் இருந்த விடுபடாமல் இறைவனை தஞ்சம் என்று வாழ்ந்து வந்தனர்.

அப்போது மீண்டும் ஒரு சோதனை பார்க்க வேண்டும் என்று எண்ணி எம்பெருமான் அவர்களுடைய உடம்பிலே சொறி சிரங்கை ஏவி விடுகின்றார். அந்த சொறி சிரங்கானது மக்களுக்கு மேலும் பல துன்பங்களை கொடுக்கின்றது. அவர்களுடைய உடம்பிலே எரிச்சல் ஏற்பட்டு மிகவும் வேதனைக்கு உள்ளானார்கள். இந்த சொறி சிரங்குடனே கடல் அலையில் போய் முங்குகின்ற போது அந்த கடல் நீரானது மேலும் பல எரிச்சல்களை கொடுத்து அந்த வேதனையை தாங்க முடியாமல் கஷ்டப்பட்டார்கள்.

அப்படி அவர்கள் வாழ்ந்திருக்கின்றபோது பொங்கு கடலானது மிகவும் கோபம் கொண்டு சான்றோர் மக்களுடைய ஆடைகளை எல்லாம் இழுத்து சென்றது. அது மட்டும் பாலதிய பெண்கள் பண்பாய் உடுத்திருந்த ஆடைகளையும் கடல் அலையானது இழுத்து சென்றது. அவ்வாறு இருக்கின்ற போது சான்றோர் மக்கள் மிகவும் வேதனை பட்டு

இருந்தார்கள். நாம் கொஞ்சம் விலகி இருக்கலாம் என்றால் தெள்ளு இனங்களும் நண்டினங்களும் மூட்டை பூச்சிகளும் நம்மை விடவில்லை. கடற்கரையில் போய் இருக்கலாம் என்றல் கடல் நம்மை அங்கே இருக்க விட்டு வைக்கவில்லை. வீட்டுக்குள் செல்ல விட்டுதில்லை மூட்டை பூச்சி என்று வேதனை பட்டார்கள்.

நாம் உண்ணுகின்ற உணவிலே நண்டு இனங்கள் வந்து இருந்து நம்மை உண்ண விடுவதில்லை. சொறிச் சிக்கினால் வந்த சொறிச்சொல் பொறுக்க முடியவில்லை. மேலும் வேகமுடன் காந்தல் மேலில் பொறுக்குதில்ல. தாகத்துக்கு ஏற்ற தண்ணீர் கிடைக்கவில்லை. பாகமுடன் உண்ணுவதற்கு பற்றதில்லை. இந்த உடம்பில் வந்த தீனமானது மேலும் வேதனைப்படுத்துகின்றது. இனி நாம் எங்கே போவோம் என்று சொல்லி சான்றோர் மக்கள் ஆறு மாத காலமாக வாகை நற்பதியில் ஈசன் செயல் எனவே அங்கு இருந்தார்கள்.

முட்டப்பதி தவசு

இதின்நேர் தெற்கு இருக்கு மொருபதிதான்
அதின்நோக்குஞ் சொல்ல ஆராலு மேலாது
துட்டர் தமைவென்று சுற்றுமதில் கோட்டையிட்டு
முட்டப்பதிநாடுமுகுந்தர் முன்னால் ஆண்டதலம்
அலங்கார நற்பதியின் அழகுசொல்லக் கூடாது
அலங்கார மான வாய்த்த கடலதினுள்
தேரு பொன்பதிகள் சிங்கார மேடைகளும்
நீருக்குள் ளேயிருக்கும் நிறங்கள்சொல்லக் கூடாது
கன்னிமா ராடும் கரியநல்லப் பூஞ்சுனைகள்
பொன்னினா லேபடிகள் பூஞ்சப்பிரக் கொலுவும்
மாணிக்கக் கல்லால் வளர்ந்தமணி மண்டபமும்
ஆணிப்பொன் தன்னால் அழகுபூம் பந்தல்களும்
வகையின்ன தென்று வகுக்க முடியாது
தொகையின் தென்று தொகுக்க முடியாது
இப்பதியில் நீங்கள் இந்தநே ரம்போனால்
அப்பதியி லுங்களுக்கு அதிகப்பலன் கிட்டுமென்று
தூக்கமதில் சொர்ப்பனம்போல் சொன்னாரே வுத்தரவு
ஆக்க முடனே அவனெழுந்து சொல்லிடவே
கேட்டு எல்லோரும் கெட்டிதா னென்றுசொல்லி
ஆட்டு மெனவே எல்லோருஞ் சம்மதித்த
நடக்கத் துணிந்தார் நாரண ருண்டெனவே
அடக்க முடனிதிலே ஆறுமா சம்வரைக்கும்
இருந்தோமே நன்றாய் இனிநடப்போ மப்பதியில்
வருந்தாமற் போவோம் மகாபரனா ருண்டெனவே
போவோ மெனவே பெண்ணா ணுடனெழுந்து
தாவமுள்ள முட்டப் பதிதலத்தில் வந்தனரே

விருத்தம்

வந்தனர் பதியின் கூறும் வாரியின் செயலுங் கண்டு

சந்தன வாரி போலும் தலமிது நன்ற தாகும்
இந்தநற் பதியில் நாமள் இருந்துதான் தவசு செய்தால்
செந்தமி ழாயன் பாதம் செயல்பெற வாழ்வோ மென்றார்

விருத்தம்

வாழ்வ திற்குறை வராது மக்களுங் கிளைக ளோடு
தாழ்வ தில்லை வண்ணம் தவமது வளர்வ தாகும்
நாள்வழிப் பலனுண் டாகும் நாரண ரருளி னாலே
ஆள்வது திடனா மென்று அதிலவ ரிருந்தா ரன்றே

நடை

என்றே மிகமகிழ்ந்து எல்லோரு மோர்முகமாய்
அன்றே மிகமகிழ்ந்து அதிலிருந்தா ரம்மானை
சூழ அணியாய்ச் சுற்று மதில்போலே
நீள அரங்குவைத்து நெருங்கப் புரைகள்வைத்து
வைத்தோர் திசையில் வாசலொன் றாகவிட்டு
மெய்த்தே தினமும் மிகவே துணிதுவைத்து
அன்ன மதற்கு அவித்தநெல் லேயுடைத்து
வன்னமுள்ள காய்கனிகள் வகைவகையாய்த் தான்வகுத்து
நல்லநீர் தன்னில் நாடி மிகத்துவைத்து
எல்லா வகைக்கும் இசைந்தநீ ரேயிருந்தி
அந்திசந்தி உச்சி ஆதிதனைத் துதித்துத்
தந்திரம தாகத் தவசு மிகப்புரிந்தார்
கண்டிருந்த மற்ற கலிநீசச் சாதியெல்லாம்
பண்டி லமைத்ததுவோ பனையேறுஞ் சாணார்க்கு
மூணுநே ரந்துவைத்து உச்சியொரு நேரமதாய்
வேணும் பகுத்தாய் வெகுவா யலங்கரிக்க
வேத னவர்க்கு விதித்த விதிப்படியோ
நாதனவர் பங்கில் நாடிமிக வந்ததுவோ
எப்போமீ னுண்டு என்றே மிகப்பார்த்து
அப்போ ததைவேண்டி அரக்குரக் காயவித்து
வாயிலெடுத் திட்டு வயிறுவளர்க்குஞ் சாணார்கள்
புகையிலையு மறந்து பெண்ணாணு மோர்மனதாய்
இந்தப் படியாய் இருக்க இவர்களுக்கு
முந்தை விதித்த விதிவந் தொத்ததுவோ
அவர்க ளுடுக்கும் ஆடையழுக் கில்லாமல்
இவருடுக்கச் சற்றும் எண்ணமொன் றில்லாதார்
மூணுநே ரந்துவைக்கும் உற்றதுணி பொன்னிறம்போல்
தோணுதலா யவர்கள் தேகம் பழபழென
இந்த விதமாய் இவர்கள்பா வித்திடவே

சொந்தத் திருமால் சேர்ந்தா ரவரிடமே
ஆதி மகாமால் அவர்பங்கி லில்லாட்டால்
ஓதி யுணவருந்த ஒன்றுந்தெரி யாதிவர்க்கு
பேற்றி நம்பூரி பிராமணர்கள் தஞ்சீலை
மாற்றித் துவைப்பு மங்கலாய்க் காணுதுகாண்
இந்தசா ணார்சீலை எரிசூரி யன்போலே
பந்த வொளிபோலே பழபழெனத் தோணுதுகாண்
பிராமணர் சூத்திரர்கள் பேணி யிவர்தமக்கு
நிராதனமாய்க் காய்கனிகள் நித்தஞ் சுமக்கிறார்கள்
பாக்கியங்கள் வந்துதென்று பனையேறுஞ் சாணார்க்கு
நோக்கமது வந்துதென்று நீணலத் துள்ளோர்கள்

எச்சாதியும் புகழ்ந்து இருந்தார்கா ணம்மானை
அச்சாதி யெல்லாம் அப்படியே சொல்லிமிகச்
சாதிமற்றோ ரெல்லாம் தலைகவிழ்ந் திருக்கையிலே
நாதித் திருமால் நாடுகின்ற சான்றோரை
இவர்க்கருளு மாண்டு இலக்குத் திகைந்துதல்லோ
அவரவர்கள் வீட்டில் அனுப்பிவிட வேணுமென்று
தோணித்தா ரவர்மனதில் சொர்ப்பனம்போ லெம்பெருமாள்
மாணிக்கச் சான்றோர் மனமறியத் தாம்பார்த்து
இனிநாம ளிப்போ இருந்த தலமும்விட்டுத்
தனியானோம் நாமளங்கே சார்ந்தோமெ யானாக்கால்
நம்முடைய சாதி நகைத்திழிவு பேசுமல்லோ
எம்முடைய தவமும் இல்லையென்று போயிடுங்காண்
முன்னிருந்த வீடும் மூண்டிருந்த பண்டமுதல்
தன்னிருந்த சொத்தும் தலத்தை யிழந்தவந்தோம்
இனியங்கே போனால் இருக்க இடமுமில்லை
இனியங்கே போவதைக்கால் இந்தக் கடலதிலே
விழுந்தோமே யானால் மேலும் பதவியுண்டு
அழுந்த வுடன்நினைத்து எல்லோரு மேயிருந்தார்
அப்போ அரிநாதன் ஆகட்டென வுறுக்கி
இப்போநீர் போவும் என்றே விடைகொடுத்தும்
இன்னமிவர் போகலையே என்றே மனதிலுற்று
அன்ன மதைக்குறைத்து ஆழாக் கரிசியிட்டார்
ஆழாக் கரிசி அலர்மலர்ந்த கோவையுடன்
தாழாமல் சனங்கள் சடையாம லேற்றனரே
துவையல் முடங்கவில்லை தொழுதுநிதஞ் சேவிப்பதுவும்
உகப்பாட் டோதுவதும் ஓயாமல் செய்தனரே
இன்னம்போ னாரில்லையே இப்படியே செய்திடினும்
இன்ன மொருவிசனம் இப்போது செய்யவென்று
எண்ணியதற்கென்ன என்றுதிருமனதில்
உன்னித் திருமால் உற்றவை சூரியைத்தான்

ஏவினார் சான்றோர் ஏந்திழைக்கும் பிள்ளைகட்கும்
மேவியே சான்றோர் மிகமெலிந்து தான்வாடிப்
பற்றி யிருந்தப் படுசிரங்கு மாறலையே
முற்றுங் கண்ணொளிவு முழுதுந் திறக்கலையே
கும்பிக் குளிரக் குடிக்கக் கிடைக்கலையே
வெம்பு மிலைகனிகள் மிகப்பறிக்கக் காணலையே
ஐயோநா மெல்லாம் அலைந்து மலைந்திருக்க
வையமதி லில்லாத வைசூரி வளைந்துதல்லோ
என்று சனங்கள் எண்ணம் பெரிதாகிச்
சென்ற சனத்தில் சிலபேர் மடிந்திடவே
பதறி நடுங்கி பரனேநீ தஞ்சமென்று
குதறி யுலகில் கூச்ச மிகவடைந்து
எங்கே யிருந்தாலும் ஈசன் செயலெனவே
சங்கை வழுகாமல் தாமோ தரனுடைய
நினைவு மயராமல் நிலைதவறிப் போகாமல்
தன்னுடைய வீட்டில் தான்போவோம் நாமளென்று
போகு முன்னாகப் பெரியோன் பதமணுகிப்
பாகுரைத்து நாமள் பட்டசள முரைத்து
உத்தரவு வேண்டி உற்றிடத்தில் போவோமெனப்
புத்தி யுடனே பெரியோ னடிசேர்ந்தார்

விளக்கம்:

அப்போது எம்பெருமான் சான்றோர் மக்களை இன்னும் மேலும் ஒரு சோதனை செய்து பார்ப்போம் என்று அங்கே ஒரு சாணன் படுத்திருக்கும் வேளையில் அவருடைய சொற்பணத்தில் வந்து இதற்கு நேர் தெற்கு ஒரு பதி இருக்கிறது அதனுடைய நோக்கம் சொல்வதற்கு யாராலும் இயலாது. துட்டர்தனை அறுத்து சுற்றி மதில் கோட்டைகள் எல்லாம் வைத்து முட்டை பதிநாடு முகுந்தன் முன்னாள் ஆண்ட தலம் அது ஆகும். அந்த அலங்கார நற்பதின் அழகு சொல்ல யாராலும் இயலாது. மேலும் கலியன் வந்தால் கண்டுக் கொள்வான் என்று கடலுக்குள் மறைத்து வைக்க பட்டுள்ளது. இத்தகைய சிறப்பு வாய்த்த கடலுக்குள் இருக்கும் பதியில் தேரும் பொன்னால் ஆன சிங்காசன மேடைகளும் நீருக்குள்ளே இருக்குது. அதனுடைய சிறப்பு அதனுடைய நன்மைகள் மற்றும் வண்ணங்கள் யாரும் சொல்ல முடியாது.

கன்னிமாராடும் கரிய நல்ல பூஞ்சனைகளும், பொன்னினாலே ஆன படிகளும், பூஞ்சபுறக் கொலுவும் மாணிக்க கல்லால் வளைந்த மணி மண்டபமும், ஆணிப் பொன் தன்னால் அழகு பூ பந்தல்களும் வகை என்னவென்று வகுக்க முடியாது. தொகை என்னவென்று சொல்ல முடியாது. இப்பதியில் நீங்கள் இந்த நேரம் போனீர்களேயானால் அங்கே உங்களுக்கு அதிக பலன் கிட்டும். ஆகவே நீங்கள் அங்கு செல்லுங்கள் என்று ஒரு சான்றோர் மக்களுடைய கண்ணில் சொற்பனம் போல் வந்து எம்பெருமான் சொன்ன அந்த உத்தரவை எல்லோரிடமும் அந்த சான்றோர் கூறிடவே எல்லோரும் ஆகட்டும் என்று சம்மதித்து அய்யா கூறிய அந்த முட்டப்பதி நாடாகிய முகுந்தன் தளத்தில் சென்று நாம் தவம் இருக்கலாம் என்று சொல்லி வாகைப்பதியை விட்டு முட்டப் பதித்தலத்தில் அங்கே வந்தனர்.

வாகைப்பதியில் ஆறு மாத காலம் தவத்தை நிறைவேற்றிய பின் சான்றோர் மக்களிடம் முட்ட பதி தவத்தில் சென்று தவம் செய்வதற்காக அய்யா கூற அதன்படி சான்றோர் மக்கள் எல்லோரும் முட்டப்பதிக்கு வந்து சேருகின்றார்கள். வந்தவர்கள் முட்டப்

பதியினுடைய சிறப்பை பார்த்து சந்தனவாரியாகிய செந்தூர் தலத்தில் எப்படி சிறப்பு இருக்கின்றதோ அதுபோல முட்ட பதியின் சிறப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறது. இந்த இடத்திலிருந்து நாம் தவசி செய்தால் இறைவனுடைய பாதாரம் பெறுவது திட்டம் என்று சொல்லி அங்கே தவசு இருக்கின்றார்கள்.

அது மட்டுமல்லாமல் வாழ்வதில் குறைவில்லாமல் மக்களும் கிளைகளோடு தாழ்வது இல்லாவண்ணம் தவம் நாம் வளர்வதாக வேண்டும் என்று சொல்லி இறைவனை தஞ்சம் என்று எண்ணி தவத்தை மேற்கொள்ளுகின்றார்கள். நாம் இந்த தவத்தை நிறைவேற்றினால் நாள் வழி பலன் உண்டாகும் நாராயணர் அருளாலே ஆகவே இந்த உலகை ஒரு உடைக்குள் ஆள்வது திட்டமாம் என்று சொல்லி ஒரே நினைவோடு தவத்தை மேற்கொண்டார்கள். அவ்வாறு தவம் இருக்கின்ற போது எல்லோரும் ஒரே முகமாக அங்கே இருந்தார்கள்.

முட்டப் பதியில் தவம் இருப்பதற்காக வந்த சான்றோர்கள் சூழ அணியாக சுற்று மதில் போல நீள அரங்குகள் எல்லாம் வைத்து நெருங்க புரைகள் வைத்து எல்லோரும் ஒரே திசையில் வாசல் ஒன்றாக வைத்து இறைவனே தஞ்சம் என்று தினமும் மூன்று நேரம் துவைத்து தவத்தை மேற்கொண்டனர்.

வாகைப்பதில் இருக்கின்ற போது பச்சரிசியால் பால் அன்னம், கடல் நீரில் சமைத்து உண்டு வந்தார்கள். ஆனால் முட்ட பதிக்கு தவம் இருப்பதற்காக வந்த பிற்பாடு அய்யா அவர்களிடம் நன்னீரில் உணவு சமைத்து அவித்த புழுங்கல் அரிசியில் சமைத்தும் காய் கனிகள் பயன்படுத்தியும் உணவு சமைப்பதற்கு விடை கொடுத்தார். நன்னீர் அருந்துவதற்கும் நன்னீரில் பதம் விடுவதற்கும் விடை கொடுத்தார். அதன்படி சான்றோர் மக்கள் நெல் அவித்து உடைத்து காய்கறிகள் வகை வகையாக தான் வகுத்து நல்ல நீரில் அன்னம் சமைத்து, நல்ல நீரை அருந்தி நல்ல நீரில் துணித்து துவைத்து நல்ல நீரை அருந்தி அந்தி சந்தி முச்சி என்று மூன்று வேளையும் இறைவனை துதித்து தவம் புரிந்தார்கள். இதை கண்டிருந்த கலிநீச சாதி எல்லாம் பண்டு அமைத்ததுவோ பனை ஏறும் சாணாருக்கு இந்த விதியானது என்று ஆச்சரியமாக பார்த்தனர்.

இப்படி மூன்று நேரம் துவைத்து பகுத்தாக வெகு சிறப்பாக இவர்கள் தவம் செய்கின்றார்களே! வேதங்களை ஓதுகின்ற பிராமணர்களுக்கு இருக்கக்கூடிய அந்த ஆடையினுடைய ஒளியை விடவும் இவர்களுடைய ஆடையினுடைய ஒளி சூரிய பிரகாசம் போன்று இருக்குகின்றதே என்று அவர்கள் ஆச்சரியமாக பார்த்தனர்.

காரணம் என்ன என்றால் எப்போது மீன் வரும் என்று எதிர்பார்த்து மீன வந்தவுடனே அரக்குரக்காக அவித்து வாயிலிட்டு வயிறு வளர்க்குகின்ற சாணார்கள். இவர்கள் வெற்றிலை பாக்கு புகையிலை இட்டு எப்போதும் இருப்பவர்கள். ஆனால் வெற்றிலை போடும் பழக்கத்தை மறந்து பெண்ணும் ஆணும் ஒரு மனதாக இப்படி இந்தபடியாக இவர்கள் தவம் இருப்பதற்கு முன்னால் விதித்த விதி தான் காரணமாக இருக்க வேண்டும். அவர்கள் உடுக்கும் ஆடை அழுக்கு இல்லாமல் இருக்க எப்படி இவ்வளவு சிறப்பாக இவர்கள் இந்த தவத்தை மேற்கொள்ளுகின்றார்கள். மூன்று நேரம் துவைக்கும் உற்ற துணியானது பொன்னிறம் போல் தோன்றுகிறதே! அவர்கள் தேகம் எல்லாம் பளபளவென்று மின்னுகின்றதே! இந்த விதி வருவதற்கு சொந்த திருமாலாகிய வைகுண்டரிடம் சேர்ந்ததுதான் காரணமாகும்.

ஆதி மகா மால் அவர்கள் பங்கில் இல்லாவிட்டால் இப்படி ஓதி உணவருந்த இவர்களுக்கு தெரியாது. போற்றி நம்பூதிரி பிராமணர்கள் உடைய தன்சிலையானது எப்படி அங்கே ஒளி வீசுகின்றதோ அதைவிட சிறப்பாக இவர்களுடைய ஆடையானது ஒளி வீசுகின்றது.

இப்போது அந்த போற்றி நம்பூதருடைய ஆடைகள் கூட மங்கலாகத்தான் காணுகின்றது இந்த சாணார்களுடைய ஆடைடையானது ஏக சூரியனைப் போல் ஒளி வீசுகின்றது. அது மட்டுமல்ல பிராமண சூத்திரர்கள் இவர்களை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்று இவர்களுக்கு நிராதனமாய் காய்கனிகளை நித்தம் சுமந்து கொண்டு கொடுத்தார்கள். இவர்களுக்கு என்ன பாக்கியங்கள் வந்தது என்று அங்கே போற்றி புகழ்ந்தார்கள்.

பனையேறும் சாணார்கள் இந்த நீனிலத்தில் உள்ளவர்கள் எல்லோரும் புகழும் படியாக இருக்கின்றது என்று வியந்தார்கள். அவ்வாறு எல்லா சாதி மக்களும் புகழும்படியாக சான்றோர்கள் தவத்தை மேற்கொண்டார்கள். அவர்கள் தவத்தை மேற்கொள்கின்றபோது கலிநீசர்கள் எல்லாம் தலைகவிழ்ந்து இருந்தார்கள். இவ்வாறு அந்த கலிநீசர்கள் சான்றோர் மக்கள் சிறப்பை கண்டு வேதனைப்படும் போது அய்யா சான்றோர் மக்கள் தவத்தை சிறப்பாக மேற்கொண்டார்கள் . ஆகவே தன்னுடைய மனதிலே இவர்கள் இருக்கக்கூடிய இந்த தவத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணினார். சான்றோர் மக்களும் மனம் பக்குவப்பட்டு சிறந்த நிலையில் இருக்கின்றார்கள்.

இவர்களை இப்போது தங்களுடைய இல்லங்களுக்கு அனுப்பி விட வேண்டும் என்று மனதிலே எண்ணினார். அதன்படி ஒரு சான்றோர் உடைய கனவிலே சொற்பனம் போல் வந்து தவத்தை நிறைவு செய்து அவரவர்களின் இல்லங்களுக்கு செல்ல உத்தரவிட்டார். உடனே சான்றோர் மக்கள் எல்லோரும் நாம் இந்த தலத்தை விட்டு எங்கே போவது. தனியாளாக ஆனோம். நாம்மல் அங்கே செல்ல இயலாது. நாம் அங்கே சென்றால் நம்முடைய சாதி மக்கள் எல்லோரும் நம்மை இகழ்ந்து பேசுவார்கள். காரணம் நாம் தவம் செய்வதற்காக வருகின்றபோது முன்பிருந்த வீடு ஆடு மாடு இவை எல்லாவற்றையும் நாம் வைத்திருந்த சொத்துக்களையும் விற்றுவிட்டு இங்கு வந்தோம்.

ஆகையால் நாம் அங்கே சென்றால் நாம் இருப்பதற்கு இடமும் இல்லை அங்கு எந்தவிதமான சொந்த உடைமைகளும் இல்லை. ஆகவே நாம் அங்கு செல்வதை காட்டிலும் இந்த கடற்கரையிலே இருந்து விடுவோம். இந்த கடலிலே நாம் விழுந்து இறந்தால் கூட நமக்கு மேலும் பதவி கிடைக்கும் என்று மன அழுதலுடன் நினைத்து எல்லோரும் மன வேதனையாக இருந்தார்கள். அப்போது வைகுண்டர் சுவாமி அவர்களின் மனநிலையை உணர்ந்து மேலும் ஒரு உபாயத்தை கையாளுகிறார். எப்படி என்றால் இப்போது நீங்கள் போங்கள் என்று விடை கொடுத்தும் இவர்கள் இன்னும் போக வில்லையே என்று மனதில் நினைத்துக் கொண்டு அவர்களுக்கு தினந்தோறும் கொடுக்கின்ற உணவின் அளவை குறைத்தார்.

அன்னம் அதை குறைத்து ஆளாக்கு அரசியை கொடுத்தார். அவர் அன்னம் கொடுக்கின்ற அந்த அரசினுடைய அளவை குறைத்தார். உணவிற்காக அரிசியை குறைத்தப் பிற்பாடு கூட அந்த சான்றோர் மக்கள் இருக்கின்ற உணவையே பகிர்ந்து உண்டு கொண்டு இருப்பது போதும் என்ற மன நிறைவோடு வாழ்ந்து வந்தார்கள். ஆனாலும் அவர்களுடைய தவநிலையிலிருந்து எள்ளளவு கூட மாறவில்லை. மூன்று நேரம் பதம் விட்டு (குளித்து) இறைவனை வழிபாடுச் செய்து வந்தார்கள்.

அப்போது வைகுண்ட சுவாமி மேலும் பல சோதனைகளை செய்வதற்கு திருவுளம் கொண்டார். காரணம் உண்ணும் உணவை நாம் அவர்களுக்கு குறைத்து கொடுத்தும் அவர்கள் வீடுகளுக்கு செல்வதற்கு மனம் இல்லாமல் இருக்கின்றார்களே என்று எண்ணி வைசூரி என்ற ஒரு கொடிய நோயை ஏவிவிட்டார். அப்போது அந்த வைசூரி நோயினால் இரண்டு சான்றோர்கள் இறந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் துவையல் காரர்கள் எல்லாம் நாம் இவ்வளவு தவநிலையில் இருந்த போதிலும் இப்படி இறப்பு

ஏற்பட்டுவிட்டதே என்று எண்ணி நாம் நம்முடைய இல்லங்களில் செல்வோம் அதற்கு முன்பாக ஐயாவிடம் சென்று கேட்போம் என்று ஐயாவை நாடி வந்தார்கள்.

சேர்ந்துவா கைப்பதியின் செய்தியெல்லா முரைத்துப்
பேர்ந்துவந்து முட்டப் பதியின் பெருமைசொல்லி
ஊணுகிடை யாததுவும் உயிரழிவு வந்ததுவும்
கோணுத லெல்லாங் கூறி விடைகேட்டார்
அப்போது நாதன் எல்லோரை யும்பார்த்து
இப்போது உங்கள் இல்லிடத்தி லேபோனால்
நாரா யணக்குருவை நாளு மறவாமல்
பேராக வேயிருந்தால் பேறுங்களுக் கேகிடைக்கும்
அன்ன மளக்கும் ஆதித் திருநெடுமால்
முன்னவன் தன்பேரால் முத்திரிக ளிட்டதினால்
சென்ற இடமெல்லாம் சிறப்பதிக முங்களுக்கு
என்றைக்கும் நல்ல இயல்பே யருள்வோமென
நல்ல விடைகொடுத்து நாரா யணரனுப்ப
வல்ல வளர்சான்றோர் வாழ்த்தி யவர்போனார்
அவரவர்கள் வீட்டில் அன்பாகப் போனவுடன்
இவரிவர்க்கு நல்ல இயல்புசெய்ய வேணுமென்று
ஏகபர நாதன் எம்பெருமா ளானவரும்
லோகமதி லெம்பெருமாள் ஒருசொரூபங் கொள்ளலுற்றார்
இரப்ப வடிவாய் எடுத்தா ரொருவேசம்
பரப்ப வடிவைப் பாருள்ளோர் கண்டுகண்டு
கோட்டைக் கணக்காய்க் குளிர்ந்தநெல் லேயெடுத்துச்
சாட்டமுடன் காய்கனிகள் சகல வகையுடனே
பழங்கள் முதலாய்ப் பப்படமும் பாயசமும்
வளங்க இலையிட்டு வற்றல்வகை சீனியுடன்
அன்ன முதல்தானம் ஆடையொடு பொன்தானம்
சொர்ணத் தானமுதலாய்த் துவையல்கா ரர்க்கெனவே
சான்றோ ரினத்தில் சார்ந்தன்பு கொண்டோர்கள்
ஆண்டோ னருளால் அன்னவஸ்த்திரங் கொடுத்தார்
நித்தம்நித்த மன்னம் நீங்களுண்ணு மென்றுசொல்லிச்
சித்த மிரக்கமதால் துவையற்கா ரர்க்கெனவே
இடைவிடா தபடியே ஈந்தாரே அன்னமது
வடவெல்லாந் தீர்ந்து மகிழ்ந்திருந்தார் துவைத்திருந்தோர்
நாலு திசையதிலும் நடந்துபிச்சை தான்குடித்துப்
பாலு பவிசுடனே பாவித்தி ருந்தனராம்
இப்படியே சான்றோர் இனமா யிருந்தவர்கள்
அப்படியே பிச்சையிட்டு அன்பாய் மகிழ்ந்திருந்தார்
பாங்கா னதுவையல் பண்டா ரங்களெல்லாம்
பூங்கார மாகப் பிச்சையமு துண்டிருந்தார்

விளக்கம்:

அப்போது வைகுண்டாரிடம் தங்களுடைய மன குறையை முறையிட்டார்கள். ஐயாவே நாங்கள் இவ்வளவு கடுமையான தவ நிலையில் இருந்தும் கூட எங்களுக்கு இப்படி சோதனைகள் வருகின்றதே என்று கேட்டபோது, ஐயா நீங்கள் தங்களுடைய இல்லங்களுக்கு செல்லுங்கள் என்று விடை கொடுத்தார். அப்போது அவர்கள் நாங்கள் எங்களுடைய சொத்து சுகம் ஆடு மாடு எல்லாவற்றையும் விற்றுவிட்டு வந்து விட்டோமே அங்கு நாங்கள் சென்றால் எங்கு போய் நாங்கள் இருப்பது என்று கேட்டார்கள். அப்போது ஐயா அவர்களுக்கு இருப்பதற்குரிய வழிமுறைகளை கூறினார். எப்படி என்றால்,
நீங்கள் எல்லோரும் உங்களுடைய இல்லிடத்திலே போனால் நாராயண குருவை நாளும் மறவாமல் பேறாகவே இருந்தால் உங்களுக்கு எல்லா விதமான சிறப்புகளும் கிடைக்கும்.

அன்னம் அளக்கும் ஆதி திருநெடுமாலின் அருளால் எல்லாம் நன்மைகளும் பெற்று சிறப்புடன் வாழ்வீர்கள். மேலும் ஆதி திருநெடுமாலின் பெயரால் முத்திரிகள் இட்டீர்களேயானால் சென்ற இடமெல்லாம் உங்களுக்கு சிறப்பு அதிகமாக இருக்கும். உங்களுக்கு என்றைக்கும் நான் நல்லியல்பு அருளுவேன் என்றுக் கூறி வைகுண்டர் சான்றோர் மக்களுக்கு விடைக் கொடுத்தார். உடனே அவர்கள் அவரவருடைய வீடுகளுக்கு சென்றார்கள். இவர்களுக்கு நல்ல இயல்பு செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணினார்.

மக்களுக்கு நல்லியல்பு கொடுப்பதற்காக உலகமதில் ஒரு சொரூபம் கொள்ளலுற்றார். எப்படி என்றால் இரப்ப வடிவாக ஒருவேசம் எடுத்தார். அப்போது மக்கள் துவையல் காரர்களுக்கு கொடுப்பதற்காக கோட்டை கணக்காய் நெல்லும் அரிசியும் வழங்கினார்கள். மேலும் பல வகையான பழங்களும், பப்படம் பாயாசம் இலைகள் வத்தல் வகைகள் சீனியுடன் அன்னம் முதல் ஆடை தானம் பொன் தானம் சொர்ணதானம் இவை எல்லாம் துவையல்காரர்களுக்கு என்று அன்பு கொண்ட மக்கள் எல்லோரும் கொண்டு கொடுத்தார்கள். இவ்வாறு துவையல்காரர்களுக்கு என்று ஐயாவின் அருளினால் இடைவிடாதபடி அன்னமெல்லாம் கொடுத்து மகிழ்ந்தனர். துவையல் காரர்களும் அவர்களுடைய மன வேதனைகளை எல்லாம் தீர்ந்து மகிழ்ந்திருந்தார்கள். இவ்வாறு நால் திசையும் சென்று பிச்சையமுது குடித்து பால் பவுசோடு சந்தோஷமாக துவையல் பண்டாரங்கள் வாழ்ந்திருந்தார்கள். சான்றோர் மக்கள் இனமாக இருந்தவர்கள் பிச்சை இட்டு அன்பாக மகிழ்ந்தார்கள். இவ்வாறு பாங்கான துவயல் பண்டாரங்கள் எல்லாம் பூங்காரமாக பிச்சை அமுது உண்டு வாழ்ந்து வந்தார்கள்.

**அய்யா உண்டு**